


# The Bible Standard

(தமிழ் வெளியீடு)

“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD
FOR THE PEOPLE”
Isaiah 62 : 10**

**Translated from BS 242**

பொருளடக்கம்

## ஓய்வு நாள்

**கிறிஸ்தவர்கள் ஏழாம் நாளை ஆசரிக்க வேண்டுமா,
அல்லது முதலாவது நாளையா, அல்லது
இரண்டையுமே ஆசரிக்க வேண்டுமா?
கிறிஸ்தவனின் உண்மையான
ஓய்வு நாள் ஆசரிப்பு எது?**

**BS Tamil Version - 18**

# ஓய்வு நாள்

## *The Sabbath Day*



வேதாகமத்தில் ஏழு என்பது ஒரு முக்கியமான எண் ஆகும். தெய்வீக காரியம் சம்பந்தப்பட்ட அனைத்திலும் இந்த எண் ஓர் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. தேவனுடைய சிருஷ்டிப்பின் ஏழாம் யுகத்தில் நமது பூமியை ஒழுங்கின் மையிலிருந்து சீருக்கு (ஒழுங்கிற்கு) கொண்டுவருவதை உருவகமான பாஷையில் ஓய்வுநாள் என்று ஆதி. 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நியாயப்பிரமாணம் இஸ்ரயேலருக்கு கொடுக்கப்படும் வரை ஒருவருக்கும் ஓய்வுநாள் கட்டாயமாக் கப்படவில்லை. நியாயப்பிரமாணம் இந்த ஒரு தேசத்திற்கு (இஸ்ரவேலுக்கு) தவிர வேறு எந்த தேசத்திற்கும் கொடுக்கப் படவில்லை. (யாத். 34 : 27; உபா. 5 : 2, 3). ஆதலால், அவர்களுடைய நியாயப்பிரமாணத்தின் ஓய்வுநாளின் தேவைகள் அந்த ஒரு தேசத்திற்கு மட்டுமே உரியதாகும். இது ஓர் குறிப்பிட்ட நேரத்தை ஓய்வெடுப்பதற்கு ஒதுக்குவது யூதருக்கு மாத்திரம் அனுகூலமானதென்றோ, அல்லது இந்த விசேஷமான ஏழாம் நாளைத் தேவனுக்கு அர்ப்பணம் செய்வதால் மற்ற எல்லா ஜனங்களுக்கும் அனுகூல மில்லாததாக இருக்குமென்றோ இது குறிக்கவில்லை. தேவன் ஒரே ஒரு தேசத்துடன் மட்டுமே உடன்படிக்கையின் தொடர்பை வைத்திருந்தார், ஆகையால் அவருடைய விருப்பத்தையும் பிரமாணத்தையும் அவர்களுக்கு மட்டுமே கொடுத்திருந்தார். அதற்கு, கீழ்ப்படிவதின் மூலம் அந்த ஜனங்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும் விதமாக ஆசீர் வாதத்தின் அஸ்திபாரத்தை ஏற்படுத்தி அதனை அவர் வாக்களித்திருந்தார்.

யூதருடைய நியாயப்பிரமாணத்தில், நான்காவது கட்டளையின் முக்கியத்துவத்தை வினாவ அவசியமில்லை. வாரத்தின் ஏழாவது நாள் (7th day) யூதருக்கு ஓய்வெ டுக்கும் (rest) நாளாகவும், அதில் பெற்றோரோ குழந்தைகளோ, எஜமானோ ஊழியக்காரனோ, ஆணோ பெண்ணோ, மாடுகளோ கழுதைகளோ அல்லது யூதருடைய எந்த ஒரு பிராணியோ எந்தவித வேலையும் செய்யப்படலாகாது என்று கட்டளையிடப்பட்டிருந்தது. (யாத். 20 : 8-11). அது தூய்மையும் ஓய்வெடுக்கும் சாதார ணமான நாளாயிருந்தது. அந்த நாளில் தெய்வீக வழிபாடு செய்ய வேண்டுமென கட்டளையிடப்படவில்லை. தெய்வீக வழிபாட்டை அந்த நாளிலோ அல்லது வேறு எந்த நாளிலோ செய்தால், தேவன் அதிருப்தி கொள்வார் என்று அர்த்தமில்லை. காரியம் என்னவென்றால், அது தெய்வீக வழிபாட்டிற்காக அல்லாமல், ஓய்வு எடுப்பதற்கே (இளைப் பாறுவதற்கே) கொடுக்கப்பட்டது என நாம் காண்கிறோம். இந்தப் பிரமாணம் இஸ்ரவேலருக்குக் கண்டிப்பானதாக இருந்தது என்பதற்கு ஒரு நிகழ்வு முழுமையாக சாட்சியளிக்கிறது. ஒரு மனுஷன் ஓய்வுநாளில் விறகுகளைப் பொறுக்கி கொண்டிருந்தான்; தெய்வீகக் கட்டளையால், அவன் மரணமடையும் விதமாக கல்லெறிந்து கொல்லப் பட்டான் (எண். 15 : 32-26); ஆகையால் இந்த வசனங் களில் ஓய்வு நாள் சம்பந்தமாக சொல்லப்பட்டுள்ள விஷயங்களின் மூலம் நியாயப்பிரமாணம் இஸ்ரவேலருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டது என்பதை நன்கு அறியலாம்.

### இயேசு ஓய்வு நாள் ஆசரிப்பதில் அசட்டையாய் இருந்ததில்லை

புதிய ஏற்பாட்டில், இயேசு ஓய்வுநாளை ஆசரிப்பதில் கண்டிப்பில்லாமல் இருப்பதாகச் சிலர் கற்பிப்பது ஓர் தவறான எண்ணமாகும். இயேசு யூதனாக பிறந்ததால். நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவராக இருந்தார். (கலா. 4 : 5). மற்ற யூதர்கள் நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்கக் கடமைப்பட்டிருந்தது போல அவரும் கடமைப்பட்டிருந்தார்.

**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

அவர் சிறிதளவாயினும் தான் கடமைப்பட்டிருந்ததிலிருந்து மீறவில்லை (மத். 5 : 17). சதுசேயர்களும் பரிசேயர்களும் நியாயப்பிரமாணத்தின் உண்மையான கருத்திலிருந்து அநேக காரியங்களில் வழி விலகிப் போயிருந்தார்கள். அவர்களுடைய பாரம்பரியத்தின்படி அக்காலத்தின் அவர் களுடைய தால்முட்-டில் இருந்ததால், அதனை கொண்டு நியாயப்பிரமாணத்தை விளக்க முயற்சித்தனர். ஆனால் உண்மையில் இயேசு கூறியபடி தொடர்ந்து அதை வெறுமையாகவும், அர்த்தமில்லாததாகவும், அவமாகவும் ஆக்கினார்கள். உதாரணமாக, அவர்களுடைய முன்னோர் களின் பாரம்பரியத்தின்படி, ஒருவன் பசியாயிருக்கும்போது கோதுமையை தன் கைகளால் கசக்கி, அதின் உமியை ஊதி, தானியத்தைச் சாப்பிடுவதென்பது ஓய்வு நாளை மீறுவ தாகும். இதனை இயேசுவின் சீஷர்கள் ஓர் ஓய்வுநாளன்று கோதுமை வயல்வழியை கடக்கும்போது செய்தார்கள். பரிசேயர்கள் இக்காரியத்தைக் கூர்ந்து கவனித்து, இயேசு தம்முடைய சீஷர்களை கடிந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தனர். ஏனெனில் அவர்களைப் பொறுத்தவரை இந்த சாதாரண செயலானது உழைப்பு – வேலை – அறுவடை – போரடிக்குதல் – தூற்றுதல் என்று கருதினார்கள். இயேசு சதுசேயர்களும் பரிசேயர்களும் நியாயப்பிரமாணத்தைத் தவறாகவும் அபத்தமாகவும் கூறுவதைக் கடுமையாக எதிர்த்தார். அவர்கள் தெய்வீக நோக்கத்தைத் தவறாக எடுத்து கொண்டு, ஓய்வு நாளின் பிரமாணத்தைத் தவறாக அர்த்தங்கொண்டார்கள் என்பதை தமது வாதத்தின் மூலமாக கற்றுக்கொள்ள விரும்புகிற யாவருக்கும் நிரூபித்தார். (மத். 12 : 1-8; மாற். 2 : 23-28). இயேசு பல சமயங்களில், நோயாளிகளை ஓய்வு நாளன்று சுகமாக்கினார். மேலும், அவருடைய பெரும்பாலான குணமாக்குதல்களை அந்த நாளில் நிகழ்த்தியதால், இது பரிசேயர்களுக்கு பெருமளவில் வெறுப்புண்டாக்கியது. அதனால், அவரை நியாயப்பிரமாணத்தை மீறினவர் என்று கூறினர். அவர் இந்த அற்புதங்களைப் பரிசேயர்களை எரிச்சலுண்டாக்கும்படியாக செய்தார் என நாம் கருத முடியாது. மாறாக அவர்களுடைய ஓய்வுநாள் பின்னால் வரும் மாபெரும் ஓய்வுநாளை அடையாளப்படுத்துகிறதென்றும், அது உலகத்தாருடைய துக்கங்களைப் போக்கும் மேசியாவின் ஆட்சி காலமாயிருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சதுசேயர்களும் பரிசேயர்களும் தெய்வீக ஒழுங்கின் அர்த்தத்தைத் தவறாக எடுத்துரைக்கின்றனர் என்று இயேசு தெளிவாகச் சுட்டிக்காட்டினார். அதாவது, தேவன் மனுஷனை ஓய்வுநாளுக்காக உண்டாக்காமல், ஓய்வுநாளை மனுக்குலத்தின் நன்மைக்காக உண்டாக்கினார் என்றார். மனிதனுடைய தேவைக்கென்று செய்யப்படும் எந்த காரியமானாலும், அதாவது எவ்வளவு கஷ்டமான வேலையாயிருந்தாலும் அது ஓய்வு நாளில் செய்யப்பட்டாலும் அது நியாயமான காரியம்தான் (பிரமாணத்திற்குட்பட்டது தான்) என்றார். உங்களில் ஒருவருடைய எருதோ அல்லது கழுதையோ குழியில் ஓய்வு நாளன்று விழுந்தால் அதை அப்படியே மரிக்க விட்டு நஷ்டமடையவோ அல்லது அந்த மிருகம் வலியால் அவதிபடுவதற்கோ விடுவீர்களோ? மெய்யாகவே அப்படி செய்வதில்லை, மாறாக அவர்கள் அந்த நாளில் பிராணியைத் துன்பத்தினின்று மீட்பதில் சந்தோஷப்படுவார்களே. இப்படி வாய்பேச அறியாத பிராணிக்கு செய்வது இரக்கத்தின் நற்செயல் தானே; அதைப் போல, மனுக்குலத்திற்கு ஓய்வுநாளில் நன்மையானதை செய்வது நன்மையில்லையோ? என்றார். பரிசேயர் களுடைய வாதமானது நியாயமில்லாதவைகளாக இருக்கின்றன என்று இயேசு தமக்கு செவிகொடுப்பவர்களுக்கு ஆழ்ந்த கருத்துபடக் கூறினார்.

## ஏழாம் நாள் இன்னும் ஓய்வு நாள் தான்

தேவன் இஸ்ரவேலருடன் செய்த நியாயப்பிரமாண உடன்படிக்கை இயேசுவின் நாளோடு நின்றுவிட்டதென்றும் ஒழிந்து போயிற்று என்றும் பல கிறிஸ்தவர்கள் தப்பான எண்ணம் கொள்கிறார்கள். ஆனால் மாறாக அப்போஸ்தலர் கூறுகையில் "**ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா?**" (ரோம. 7 : 1) என்கிறார். யூதருடைய நியாயப் பிரமாணமானது அவர்களுடைய பிதாக்களுடனும், மோசேயின் நாட்களிலும் இருந்தது போலவே இப்பொழுதும் கட்டாயமாகவே யூதன் மீது இருக்கிறது. மரணத்தினால் (சொல்லர்த்தமான மரணத்தாலும் அல்லது கிறிஸ்துவினிடத்தில் சேர்ந்து இவ்விதமாக நியாயப்பிரமாணத்திற்கு மரித்தால், வச. ரோம. 10 : 4) மட்டுமே ஒரு யூதனை நியாயப்பிரமாண உடன்படிக்கையிலிருந்து விடுவிக்க முடியும். தேவன் தம்முடைய குறித்த காலத்தில், தீர்க்கதரிசியின் மூலமாய் அறிவித்த (எரே. 31 : 31-34) புது நியாயப்பிரமாண உடன்படிக்கை என்ற புது உடன்படிக்கை விரிவுப்படுத்தப்படும் வரைக்கும் யூதன் விடுவிக்கப்பட முடியாது. அந்த புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர் ஜனங்களிலிருந்து உயர்த்தப்பட்ட பின்பே அது நடைபெறும். அந்த தீர்க்கதரிசி மோசேயைப் போன்றவர், ஆனால் நிறைவேறுதலில் அவனிலும் பெரியவர். அந்த தீர்க்கதரிசி மகிமையடைந்த கிறிஸ்து – அதாவது, தலையாகிய இயேசுவும் முழுமையடைந்த சபையுமாகிய கிறிஸ்து. இந்த சபை வகுப்பரைப் பற்றி அடிக்கடி சரீர அங்கத்தினர்கள் என்றும் சில இடங்களில் மணவாட்டி எனவும், ஆட்டுக்குட்டியானவரின் மனைவி எனவும் கூறப்பட்டுள்ளது. (வெளி. 21 : 9). இந்த நிறைவேறுதலான மத்தியஸ்தர், பின்பதாக ஸ்தாபிக்கப்போகும் (அப். 3 : 22, 23) புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் யூதர்களையும் இன்னும் யாரெல்லாம் தேவனிடம் அவர் மூலமாய் இசைந்து வருகிறார்களோ அவர்களையும் முன்பிருந்த பூரண மனுஷீகத்திற்கு வளரவும், ஒவ்வொரு காரியத்திலும் தெய்வீகப் பிரமாணத்தை முழுமையாக அவர்கள்

கடைபிடிக்கவும் உதவி புரிவார். இந்த பெரிய மத்தியஸ்தராகிய மேசியா, ஆயிர வருஷமளவும் இந்த மாபெரும் வேலையைச் செய்வார். (வெளி. 20 : 4, 6).

மேற்கூறியபடி, ஒவ்வொரு யூதனிடமும் நியாயப்பிரமாண உடன்படிக்கை இப்பொழுதும் நடைமுறையில் தான் உள்ளது. அது மற்ற ஜனங்களிடமல்ல, யூதர்களிடமே செயல்பாட்டில் உள்ளது. அது ஒருபோதும், மற்ற ஜனங்களிடம் கட்டாயப்படுத்தப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும் புது உடன்படிக்கையின் ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட காலத்தில், அதாவது சுவிசேஷ யுகத்தில், இயேசு மகா பிரதான ஆசாரியராய், "**விசேஷித்த பலிகளை**" செலுத்துகிறார் என்று பரி. பவுல் (எபி. 9 : 23) கூறுகிறார். இது அடையாளமாக லேவி. 16-ல் விவரிக்கப்பட்டிருக்கிறது. மகா பிரதான ஆசாரியனின் பலியின் முதல் பகுதியாக, அவர் "**மாம்சமாகி**" எந்த காரியத்திற்காக மாம்சமாக்கப்பட்டாரோ அதற்காக "**மரணத்தை ருசிப்பார்க்கும்படியாக**" தமது மனுஷீக சரீரத்தைப் பலியாகக் கொடுத்தார். (யோவா. 1 : 14; எபி. 10 : 5; 2 : 9). இரண்டாம் பகுதியாக, தமது "விசேஷ பலிகளை" அதாவது தமது சரீரமாகிய சபையை பெந்தேகோஸ்தே நாள் முதல் பலியிடுவதைக் குறிக்கிறது. அவரே சபை வகுப்பாருடைய பரிந்து பேசுபவராக (வக்கீலாக) ஆனார். பூமியில், இவர்களைத் தமது அங்கத்தினர்களாக ஏற்றுக் கொண்டார். அதுமுதல் அவர்களுடைய பாடுகள் அவருடைய பாடுகளாக எண்ணப்பட்டது. ஏனெனில் அவர்களைக் குறித்து தமஸ்கு ஊரானாகிய சவுலிடம் சொல்லும்போது, "**சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?**" "**நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே**" என்றார். (அப். 9 : 4, 5). இவர்களை மாம்சத்தில் அவருடைய பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்பட்டனர். அவர்களுடைய குறைபாடுகளை நீதிபரருடைய பலியின் புண்ணியத்தால் மூடப்பட்டு, அவர்கள் புது சிருஷ்டிகளாகும் படியாக, இயேசுவைத் தலையாக கொண்டு, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக ஆகும்படியாக பரலோகப்பிதாவினால் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டார்கள்.

மேலே குறிப்பிட்டபடி, ஓய்வுநாள் இன்றும் நடைமுறையில் உள்ளது, அதை அனுசரிப்பது பிற தேசத்தவர்களுக்கல்ல, யூதருக்கே நியமிக்கப்பட்ட கட்டளையாகும். சிலர் தவறாக தங்களை யூதராகவும் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழ் இருப்பவர்களாகவும் கருதி ஓய்வுநாளைக் கடைப்பிடிக்க சிலர் முயற்சி செய்கின்றனர். பரி. பவுல் இக்காரியத்தை அவருடைய நாட்களில் கண்டார். யூதரல்லாத புறஜாதிகளாகிய கலாத்தியாவைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுக்கு அவர் எழுதும்போது, "**நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள் நியாயப்பிரமாணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா?**" "**புத்தியில்லாத கலாத்தியரே, உங்களை மயக்கியவன் யார்?**" (கலா. 4 : 21; 3 : 1) என்கிறார். மேலும் அவர், யூதர்கள் நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்தில் இருக்கிறார்கள் என்றும், அதன் கீழ் ஒருவரும் நித்திய ஜீவனை அடைய முடியாதென்றும் அவர்களுக்கு தொடர்ந்தேர்ச்சியாய் காண்பிக்கிறவராயிருந்தார். அவருடைய வாதம் என்னவென்றால், நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்கும் யூதர்களே அதன் மூலமாய் நித்திய ஜீவனை அடைய முடியாதபோது, புறஜாதிகள் நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிப்பதனால் தெய்வீக நன்மையையும், நித்திய ஜீவனையும் அடைய முடியும் என்று அவர்கள் எண்ணுவது முட்டாள்தனமானது என்பதாகும். ஆகையால் "**எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை**" (ரோம. 3 : 20) என்று கூறுகிறார். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வது மட்டுமே தேவனுடைய பார்வையில் நீதிமானாகுதல் என்ற நிலையை அடைய ஒரே வழியாகும். நாம் நீதிமானாகுதலில் தொடர வேண்டுமானால் (காத்து கொள்ள வேண்டுமானால்) அவருடைய சீஷர்களாக முழு பிரதிஷ்டையுடனும், மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாகவும், எஜமானருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும். அதாவது, "**அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்பு கொடுக்க வேண்டும்.... இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை**" (ரோம. 12 : 1) என்று எழுதியிருக்கிறபடி செய்ய வேண்டும்.

## கிறிஸ்தவர்களும் நியாயப்பிரமாணமும்

கிறிஸ்தவர்கள் தெய்வீக நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்கக் கூடாது என்று பரி. பவுல் அர்த்தப்படுத்தவில்லை, ஆனால் மாறாக அவர்கள் அந்த உடன்படிக்கைக்குக் கீழாகத் தங்களை வைத்துக் கொள்ளக் கூடாது; அல்லது நியாயப்பிரமாண உடன்படிக்கையை எதிர்ப்பதினால் தேவனோடு இசைந்திருக்கலாமென்றோ, நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளலாமென்றோ எண்ணலாகாது என்றே கூறுகிறார். மாறாக, அவர் பல வசனங்களில், "**மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறுகிறதே**" என அறிவுறுத்துகிறார். (ரோம. 8 : 4). அவருடைய விளக்கம் தெளிவாயிருக்கிறது. பத்து கற்பனைகள் ஒருபோதும் கிறிஸ்தவர்களிடம் கொடுக்கப்பட்டதல்ல, என்றாலும் அந்த பத்து கட்டளைகளையும் கிறிஸ்தவர்கள் நோக்கி பார்த்து, அவைகளின் போதனைகளின் கருத்தைக் கவனித்து, தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் அப்பியாசிக்க முயற்சிப்பது மிக்க நல்லது.

பத்துகட்டளைகளின் கருத்து என்ன? நமது ஆண்டவராகிய இயேசு அதனை – "**உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூறுவாயாக....என்றும்,**" "**உன்னிடத்தில் அன்பு கூறுவதுபோல் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக**" என்றும்

தெளிவாகக் காண்பித்துள்ளார். (மாற். 12 : 30, 31). நமது ஆண்டவர் நியாயப்பிரமாணத்தைக் கடைபிடித்ததோடு மாத்திரமல்ல, அதை விரிவுப்படுத்தி யூதர்களின் எதிர்பார்ப்புகளை விட நீளத்திலும், அகலத்திலும், உயரத்திலும், ஆழத்திலும் மிக பண்மடங்காக இருக்கிறது என்றும், விழுந்துபோன மனுக்குலமானது அதனைக் கடைபிடிக்க இயலாது என்பதையும் அவர் காண்பித்தார்.

அவர் நியாயப்பிரமாணத்தை கனமுள்ளதாக்கினார். (ஏசா. 42 : 21). யூதர்கள் நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்க பதினாறு நூற்றாண்டுகளுக்கும் மேலாக முயற்சித்து கொண்டிருந்தபோதிலும், தேவனைத் திருப்திப்படுத்தும்படியாக யாராவது அதை கடைபிடித்ததுண்டோ? என்று சந்தேகிக்கக் காரணமுள்ளது. ஆனால், இயேசு நியாயப்பிரமாணத்தைப் பூரணமாக நிறைவேற்றி, தேவனுக்குப் பிரியமாக அதைக் கடைபிடித்து, அதனைக் கனமுள்ளதாக்கினார். அது பூரண மனிதனுடைய ஆற்றலுக்கு மேற்பட்டதல்ல என்றும், அது நியாயமான அவசியம் என்றும் அவர் நிரூபித்தார். மத். 5-ல், இயேசு கட்டளைகளுள் (கற்பனைகள்) பலவற்றிற்கு அதன் ஆழ்ந்த கருத்தையும் அதன் தாற்பரியத்தையும் காண்பித்தார். உதாரணமாக, "**கொலை செய்யாதிருப்பாயாக**" என்ற கட்டளையானது, ஒருவன் கோபமடைந்தாலோ அல்லது தீங்கு விளைவிக்கிற எந்த காரியத்தை வெளிப்படுத்தினாலோ அல்லது கொலை செய்யும் ஆவியையுடையவனாகவோ இருந்தால் அந்த கட்டளையை மீறினவனாயிருப்பான் என்று சுட்டிக்காட்டியுள்ளார். (1 யோவா. 3 : 15 ஒத்துபார்க்கவும்). விபச்சாரத்தைக் குறித்த கற்பனையைக் குறித்து நம்முடைய ஆண்டவர் கூறுகையில், அதனை செயல்படுத்தாவிட்டாலும் அதனை மனதில் எண்ணினாலே அதனை மீறியதாகும் என்றார். விபச்சாரத்தைக் குறித்த ஓர் சாதாரண இச்சையானது வெளிப்படும்படி சந்தர்ப்பம் கிடைக்குமாயின் அவன் அந்த கற்பனையின் கருத்தை மீறுவதாகிவிடும். இவ்வாறாக இந்த பத்து கற்பனைகளுக்கு விரிந்த கருத்திருப்பதின் காரணமாக, கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருப்பதால் யூதர்களைவிட அதிகமாக அதனை மதித்துணர முடியும் என அப்போஸ்தலன் கூறுகிறார். மாம்சத்தின் பிரகாரமாகவும் அதின் விருப்பங்களின் பிரகாரமாகவும் நடவாமல், அன்பு மற்றும் பரிசுத்தத்தின் ஊற்றாக இருக்கிற அவருடைய விருப்பத்திற்கேற்றவாறு, நம்முடைய இருதயங்களில் பிதாவானவர் அனுப்பியிருக்கிற ஆவியாகிய தெய்வீக பிரமாணத்தின் ஆவிக்கேற்றவாறு, ஆவியின் பிரகாரமாக நடக்கிற (இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற கிறிஸ்தவர்களாகிய) நம்மிடத்தில் இந்த தெய்வீகப் பிரமாணத்தின் இந்த உயர்ந்த கருத்து நிறைவேறுகிறது.

## ஓய்வு நாளின் கருத்து

யூதர்கள்அறிந்திருந்ததைப் பார்க்கிலும் இதே போல் மற்ற கற்பனைகளுக்கும் வேறு பல ஆழ்ந்த அர்த்தங்களும் உள்ளன. அதுபோல நான்காம் கற்பனையான ஏழாம் நாளாகிய ஓய்வுநாளை ஆசரிப்பதும் ஆழ்ந்த அர்த்தமுடையது. "**ஓய்வு நாள்**" (sabbath) என்ற வார்த்தையானது இளைப்பாறுதலைக் (rest) குறிக்கும். ஒரு கிறிஸ்தவனுக்கு இதன் ஆழ்ந்த மற்றும் நிறைவேறுதலான அர்த்தம் என்னவென்றால் விசுவாசத்தில் இளைப்பாறுதல் என்பதாகும். யூதனால் மோசேயின் பிரமாணத்தைக் கடைபிடிக்க முடியவில்லை, ஆதலால் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குக் கீழ் நித்திய ஜீவனைப் பெறவும் முடியவில்லை. நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மரித்து அதனை முழுமையாக விட்டுவிடுவதின்மூலம் கிறிஸ்துவில் அங்கமாவதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. (ரோம. 7 : 4). அதாவது பலியின் உடன்படிக்கையில் பங்கடைவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அப்படி செய்வதினால், அவன் நியாயப்பிரமாணத்திலிருந்தும் அதன் ஆக்கினையிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டிருப்பான் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. ஏனெனில் "**அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் ஆக்கினைத்தீர்ப்பில்லை**" (ரோம. 8 : 1). யாரெல்லாம் கிறிஸ்துவின் வழியில் நடக்க முற்படுகிறார்களோ, அவர்களுடைய குறைபாடுகள் இயேசுவின் பலியின் புண்ணியத்தால் மூடப்பட்டு, தேவ ஆவியும் அவருடைய வார்த்தையும் அவர்களுக்குத் தேவ கிருபையின் உத்திரவாதத்தை அளிக்கிறது. அந்த தேவ கிருபையானது, இயேசு கிறஸ்துவின் மூலமாக தேவனோடு சமாதானத்தில் வழிநடத்தி அவர்களுக்கு இளைப்பாறுதலளிக்கிறது. அப்போஸ்தலர் கூறுகையில் "**விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுலில் (ஓய்வில்) பிரவேசிக்கிறோம்.**" (ரோம. 4 : 3) என்கிறார். மேலும் அப்போஸ்தலர் கூறுகையில், நாம் இப்போழுது விசுவாசத்தின் மூலமாகவும், கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதல் மூலமாகவும் விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திருக்கிறோம். ஆனால் இன்னும் உயிர்த்தெழுதலுக்கு பின்பு கிறிஸ்தவர்களுக்கு பெரிய இளைப்பாறுதல் காத்திருக்கிறது. தேவனிடம் அன்பு செலுத்துபவர்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்டுள்ள இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பார்கள்.

## ஐம்பதாவது நாளும் ஐம்பதாவது வருஷமும்

இஸ்ரவேலருக்கு இரண்டு அமைப்பான ஓய்வுகள் இருந்தன என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். ஒன்று, ஓய்வு நாட்கள், மற்றொன்று ஓய்வு வருடங்கள். ஓய்வு நாட்கள் வசந்த காலத்திலிருந்து எண்ணப்பட்டு வந்தது . அது ஏழு என்ற எண்ணின் (7) பெருக்குத் தொகையாகும். ஏழு நாட்கள் ஏழு முறையாக (7 X 7 = 49) நாற்பத்தி ஒன்பது நாட்கள் அவர்களுக்கு யூபிலி நாளையையும், ஐம்பதாவது நாளையையும் கொண்டு வந்தது. அது பெந்தேகோஸ்தே நாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நமது ஆண்டவர் மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனாகும் (1 கொரி. 15 : 20) வரைக்கும் பெந்தே

கோஸ்தேக்கு உண்மையான அர்த்தம் இருந்ததில்லை. அதிலிருந்து உடனடியாக, ஏழு மடங்கான ஏழோடு ஒன்றைக் கூட்டினால் [(7x7)+1=50] வரும் ஐம்பதாவது நாளன்று பரிசுத்தாவி அவர்கள் எல்லார் மேலும் வந்தது. "**உத்தம இஸ்ரவேலரில்**" யாரெல்லாம் தங்களை ஏற்கெனவே பிரதிஷ்டை பண்ணி மேல் வீட்டறையில் தங்களுடைய பாவம் நிவிர்த்தியடைய நிறைவேறுதலான பிரதான ஆசாரியருக் காக காத்திருந்தார்களோ அவர்களுக்கு மாத்திரம் பரிசுத்தாவி அருளப்பட்டது. இந்த பரிசுத்தாவி தேவ தயவு திரும்ப பெற்றதற்கான ஓர் அத்தாட்சியாகும். அப்பொழுதே உடனடியாக அவர்கள் தேவனோடு சமாதானம் பெற்றார்கள். அப்பொழுதே அவர்கள் இளைப்பாறு தலுக்குள் பிரவேசித்தார்கள். அந்நேரமே அவர்கள் தங்களை தேவனுடைய பிள்ளைகளாகவும், பரிசுத்தாவி யினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாகவும், குறித்த காலத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்திரராகவும் ஆக்கப்படுவோம் என்று அறிந்து கொண்டனர். இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் சுவிசேஷ அழைப்பிற்கு கீழிருந்தவர்களில் எல்லாரும், இயேசுவையும் அவருடைய சீஷர்களின் அடிச்சுவட்டை பின்பற்றின எல்லாரும், பாவத்தை வெறுத்து, இயேசுவையே நம்பி, தங்கள் ஜீவியங்களை அவருக்காக பிரதிஷ்டை பண்ணினவர்கள் அனைவரும் பரிசுத்தாவியை பெற்று அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்திருக்கிறார்கள் என்பது உண்மையில்லையா? இந்த இளைப்பாறுதலுக்குள்ளும் ஆவியின் முழுமையான களிகூறுதலுக்குள்ளும் பிரவேசித் தவர்கள் மட்டுமே அதனைக் குறித்து மதித்துணர முடியும்.

நாம் இப்பொழுது ஓய்வு வருடத்தைப் பற்றி பார்ப்போம். ஒவ்வொரு ஏழாம் வருஷமும் நிலங்கள் ஓய்வைப் பெற்றிருந்தன. ஏழு ஏழு வருஷத்துக்குப்பின் (நாற்பத்து ஒன்பது) வந்த வருஷமானது அவர்களுக்கு ஐம்பதாவது வருஷத்தைத் தந்தது, அந்த வருஷம் யூபிலி வருஷமாகும். அந்த வருஷத்தில் எல்லா கடன்களும் தீர்க்கப்பட்டு. ஒவ்வொரு இஸ்ரவேலனும் தங்கள் சொந்த இடத்திற்குத் திரும்புவார்கள். அது அவர்களுக்கு சமாதான மும், சந்தோஷமும், ஓய்ந்திருக்கும் வருஷமுமாகும். இந்த யூபிலி மேசியாவின் ராஜ்யத்தின் மகிமையான திரும்பகொடுத்தலின் காலத்தை வர்ணித்துக் காட்டுகிறது. அது நாம் விசுவாசிக்கிறபடி மிக அருகில் உள்ளது. இந்த நாட்கள் நெருங்கும்போது அனைத்து விசுவாசமுள்ள புது சிருஷ்டிகளும் பரலோக நிலைமையை அடைந்து என்றென்றைக்கும் தேவனோடிருப்பார்கள். அவர்களுடைய இளைப்பாறுதல் (ஓய்வு நாளை கடைப்பிடித்தல்) முழுமையும் பூரணமும் அடையும்போது நிறைவேறுதலான யூபிலியில் தேவ அனுக்கிரகத்தின் ஆசீர்வாதங்கள் சகல மனுக்குலத்திற்கும் படிப்படியாக விரிந்து வந்தடையும். தேவனோடு இசைந்திருக்க விரும்பும் ஒவ்வொரு சிருஷ்டியும் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும். தேவன் இதனை மகா மீட்பர் மூலமாக தரித்திருக்கும் வேதனைப் படுகிற சிருஷ்டிகளுக்கும் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்.

## கிறிஸ்தவர்களின் ஓய்வுநாள்

ஏழாம் நாளையோ அல்லது, வாரத்தின் எந்தவொரு நாளையோ ஓய்வு நாளாக அனுசரிக்கும்படி தேவன் கிறிஸ்தவர்களின்மீது கட்டாயமாக்கவில்லை என்று ஏற்கனவே கூறியவைகளிலிருந்து நாம் நன்கு அறிந்திருக்கிறோம். எவ்வாறாக இருப்பினும் அவர் கர்த்தருக்குள் ஓர் இளைப்பாறுதலை அவனுக்கு அருளி யிருக்கிறார். இது யூதருடைய ஓய்வுநாள் மூலம் அடை யாளப்படுத்தப்படுகிறது. நாம் இந்த இளைபாறுதலை எந்த நாளில் கொண்டாட வேண்டும் என கேட்கலாம்? நாம் இவ்விதமான மனப்பான்மையுடன் கர்த்தருக்குள்ளும் அவருடைய நிறைவடைந்த வேலைக்குள்ளும் மகிழ்ச்சி, இளைப்பாறுதல், சமாதானம் ஆகியவற்றை அனுதினமும் கொண்டிருக்க வேண்டும் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். ஆகையால் ஒரு கிறிஸ்தவனுக்கு, யூதர்களுக்கு இருப் பதுபோல ஓய்ந்திருக்கும் ஓர் ஓய்வு நாளுக்கு பதிலாக, அது அனுதினமும் தொடர்ச்சியாக செய்யும் இளைப் பாறுதலாகும். அது சரீரத்திற்கு கொடுக்கும் ஓர் இளைப் பாறுதலுக்கு பதிலாக, அதைவிட மேலானதான ஆத்து மாவின் இளைப்பாறுதலாகவும், அவனுடைய முழு ஜீவியத்தின் இளைபாறுதலாகவும் இருக்கிறது. அவன் எங்கே இருந்தாலும் களிகூரத்தக்கதாகவும், அது அவனுக்கு நிலையான தொடர்ச்சியான விசுவாசத்தில் இளைப்பாறு தலாயிருக்கிறது. ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கு இதுவே ஆவிக்குரிய நிறைவேறுதலாகயிருக்கிறது, நியாயப்பிரமாண ஓய்வு நாளோ மாம்ச இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது. ஒருவன் யூதருடைய ஓய்வு நாளைக் குறித்து வாக்குவாதம் பண்ணினால் அவன் அதை இன்னும் புரிந்து கொள்ளவோ அல்லது மதித்துணரவோயில்லை எனக் காட்டுகிறது. ஆனால், நிறைவேறுதலான ஓய்வுநாளைத் தேவன் ஆவிக்குரிய இஸ்ரவேலருக்குக் கிறிஸ்துவின் மூலமாக அருளினார்.

கிறிஸ்தவனானவன் வாரத்தில் ஒருநாளைத் தேவனுக்கென்று பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டுமென்பது கட்டாயமில்லையா? நாங்கள் ஆமாம் என்றே பதிலளிக் கிறோம். உலகத்தில் வேறு ஒருவருக்குமில்லாத கடமை கிறிஸ்தவன் மீது உள்ளது. தேவனிடம் உடன்படிக்கை பண்ணியிருப்பதால் ஒவ்வொரு நாளும் பரிசுத்தமாக ஆசரிக்கும்படியாக அவன் கடமைப்பட்டிருக்கிறான். ஒவ்வொரு நாளும் அவன் ஆண்டவரை தன்னுடைய தேவனென்றும் அவன்தன் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அன்பு கூர வேண்டும். ஒவ்வொரு நாளும் தன்னை போல் பிறனை நேசிக்க வேண்டும். நம்முடைய விருப்பங்களுக்கு மாறாக தெய்வீக பிரமாணத்தின் ஆவிக்கேற்றவாறு தன்னால் முடிந்தமட்டிலும் சிறப்பாகச் செய்ய போராடுகிறபோது, நம்முடைய குறைபாடுகளை இயேசு

கிறிஸ்து என்ற மீட்பர் தம்முடைய இரத்தத்தால் கழுவுகிறார் என்பதை உணருகிறவர்கள், ஆண்டவருடைய இந்த சமாதானத்திலும் சந்தோஷத்திலும் தொடர்ந்து இளைப் பாறுவார்கள். "**நாமும் அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கி றோம்.**" ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கு சரீரப்பிரகாரமான அல்லது மன சம்பந்தமான இளைப்பாறுதலுக்காக வாரத்தின் ஏதேனும் ஒரு நாளை ஓய்வு நாளாக ஆசரிக்க வேண்டும் எனக் கட்டளையிடப்படவில்லை. அவர்கள் மனரீதியான ஓய்வை எப்பொழுதும் கொண்டிருப்பார்கள். சரீரப்பிரகாரமான ஓய்வை ஒரு நாளோ அல்லது அதற்கு மேலோ மனித சமுதாயம் ஏற்படுத்தியிருக்கிற ஒழுங்குகளின்படி இருக்கலாம்.

## சுயாதீனத்தின் சரியான உபயோகம்

கிறிஸ்துவில் நம்முடைய சுயாதீனமானது பாவம் மற்றும் மரணத்தின் தண்டனையிலிருந்தும் அதின் தாக்கத்திலிருந்தும் நாம் பெற்ற ஓர் விடுதலை என்பதை நாம் நினைவு கூர வேண்டும். வேதாகமத்தில் கிறஸ்தவர்கள் மீது எந்தவொரு நாளையும் விசேஷமாக ஆசரிக்க வேண்டும் என்று கட்டளையிடப்படவில்லை என்று நாம் எண்ணவோ அல்லது ஏழாம் நாளை குறித்த யூத கட்டுபாடுகளிலிருந்து நமக்கு விடுதலை கிடைத்திருக்கிறது எனவோ நாம் எண்ணாதிருப்போமாக. இந்த சுயாதீனத்தை சிறிய அளவாக தனது மனதில் கொண்டு, முக்கியமாக பாவம் மற்றும் மரணத்தின் அதிகாரத்திலிருந்து நம்முடைய விடுதலையை நாம் ஒத்துப்பார்ப்போமாக. மானிடப் பிரமாணங்களை (சட்டங்களை) இயற்றுகிறவர்கள் ஒரு நாளையோ அல்லது வேறு ஏதேனும் நாளையோ விசேஷித்திருந்தால் அந்த நாளையும் நாம் கடைபிடிப்போம். நாம் மனிதருடைய ஒவ்வொரு சட்டங்களுக்கும் கீழ்ப்பட்ட பிரஜைகளாக இருப்போமாக. கிறிஸ்தவ தேசங்களில் வாரத்தின் முதல் நாள் தேசப்பிரமாணத்தின்மூலம் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த பிரமாணத்தை நாம் உதறி தள்ளி, தேவன் இத்தகைய ஒரு பிரமாணத்தை எங்கள் மீது வைக்கவில்லை ஆதலால் நாங்கள் எங்கள் வேலைகளை செய்ய எங்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என சொல்லுவோமோ? நிச்சயமாக இல்லை. மாறாக நாம் நமது அலுவல்களிலிருந்து ஓய்வாக ஏழில் ஒரு நாள் கிடைத்தால் நாம் சந்தோஷப்படுவோம். அந்த நாளை நாம் ஞானமாக நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் மற்றும் பிறருக்கு உதவியாகவும் நாம் பயன்படுத்துவோமாக. இவ்விதமான ஒழுங்கினால் நாம் எப்பேற்பட்ட ஆசீர்வாதத்தைப் பெற முடியும்! மானிட ஒழுங்கினால் கிடைக்கும் இந்த நாளில் தொழுகைக்காக நாமெல்லாரும் ஓரிடத்தில் கூடவும், தேவனுடைய வார்த்தையைப் படிக்கவும் துதிக்கவும், சத்தியத்தைச் சாட்சியாக மற்றவர்களிடத்தில் அறிவிக்கவும் இந்நாள் எவ்வளவு அனுகூலமானதாக இருக்கிறது! பூமிக்குரிய சட்டங்கள் வாரத்தில் ஒரு ஓய்வு நாளைக் காட்டிலும் அதிக நாட்களை கொடுத்தால் நாம் மேலும் சந்தோஷப்படலாம். ஏனென்றால் அது ஆவிக்குரிய காரியங்களை நாம் செய்வதற்கு சிலாக்கியம் அளிக்கிறதே.

நாம் கிறிஸ்துவில் களிகூருகிற சுயாதீனம் சம்பந்தமான நம்முடைய அறிவானது மற்றவர்களுக்கு இடறல் உண்டாக்கும் விதமாக உபயோகிக்கப்படக்கூடாது. நம்முடைய தேசத்தின் பிரமாணத்தின் பிரகாரமாக நாம் ஆசரிக்கும் ஓய்வு நாளானது முழுமையடைந்ததாகவும், நமது நற்காரியங்கள் தீயவைகளாக பேசப்படாதவாறும் இருக்க வேண்டும். கிறிஸ்துவில் நம்முடைய சுதந்திரமானது மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை பெற்றது என்று வியாபார நோக்குடனோ அல்லது அது சிற்றின்பங் களுக்கான அனுமதி எனவோ யாரும் தப்பர்த்தம் கொண்டுவிடக் கூடாது. மாறாக, ஆண்டவரைத் தொழுது கொள்ளவும் ஊழியம் செய்யவும் மகா பரிசுத்த விசுவாசத்தில் சகோதரர்களைக் கட்டி எழுப்பவும், கிடைத்த ஓர் சந்தர்ப்பமென்றும் சிலாக்கியம் என்றும் எண்ண வேண்டும்.

* * *

# செவன்த் டே அட்வென்டிஸ்ட் சபையாரின் கேள்விகளுக்கான பதில்கள்

ஓய்வு நாளைக் குறித்த சேவந்த் டே அட்வந்து காரர்களின் கூற்றுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இங்கே அவை களுக்கு பதிலளிப்பது சிறந்தது என நாங்கள் கருதுகிறோம்.

## உடன்படிக்கை தொடங்கிய பின் ஓய்வுநாள் கொடுக்கப்பட்டது.

**(1)** சீனாய் மலையில் வைத்து கொடுக்கப்பட்ட நியாயப் பிரமாணத்திற்கு முன்பே ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டது (யாத். 16 : 23-30), - என்பது செவன்த் டே அட்வென்டிஸ் டுகளின் கூற்றாகும்.

**பதில் :** ஆமாம், ஆனால் இஸ்ரவேலர் எகிப்தை விட்டு புறப்பட்டது முதல் நியாயப்பிரமாண உடன்படிக்கை முழுமையாக நடைமுறையில் இருந்து வந்தது. நியாயப்பிரமாணத்தில் பஸ்கா ஒரு முக்கியமான அம்சமாக இருந்தது. அவர்கள் தங்கள் யாத்திரையைத் தொடங்கு வதற்கு முந்தின இரவு அது ஆரம்பிக்கப்பட்டது. (யாத். 12 : 41-43). மோசே தேவனால் முன்பே நியமிக்கப் பட்டிருந்தான், அவன் அந்த தேசத்தின் அடையாளமான பிதாவாகவும், பிரதிநிதியாகவுமிருந்தான். தேவனுடைய கிரியைகள் மோசே மூலமாய் மட்டுமே செயல்பட்டு வந்தது. மோசேயை இஸ்ரவேலர் ஏற்றுக் கொண்டு, அவனுக்குக் கீழ்ப்படிவதின் மூலம் அவர்கள் அவன் கொடுக்கவிருக்கும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதாக முன்னமே உடன்படிக்கை பண்ணியிருந்தார்கள். சீனாய் மலையில்

விளக்கப்பட்டவைகள் அவர்களுடைய உடன்படிக்கையின் பொதுவான உடன்பாடும் அங்கீகாரமும் ஆகும்.

கற்பலகைகளிலே சீனாய் மலையில் நியாயப் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பே ஓய்வுநாள் ஆசரிப்பு நிறுவப்பட்டது. அதாவது வனாந்தரத்தில் மன்னா கொடுக்கப்பட்டபோது, ஆறாம் நாளின் மன்னா இரட்டிப்பாகக் கொடுக்கப்பட்டது. ஆனால், ஏழாம் நாளிலோ ஒன்றும் கொடுக்கப்படவில்லை. அதில் ஒரு முக்கியப் பாடம் அந்த வனாந்திரத்தில், அந்த அனுகூலமான தருணத்தில் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டது. (யாத். 16 : 5, 22-30). எகிப்திய அடிமைத்தனத்தில் கடினமான ஆளோட்டிகளிடமிருந்து ஓய்வு கிடைக்காமல் தவித்த இஸ்ரவேலர், அவர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டதின் ஞாபகார்த்தமாக அது ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது தெளிவாக உபா. 5 : 15-ல் சொல்லப்பட்டிருக்கிறது, "**நீ எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புறப்படப் பண்ணினார் என்றும் நினைப்பாயாக; ஆகையால் ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார்.**" "**அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே**" என்று வசனம் தெளிவாகக் கூறுகிறபடி நியாயப்பிரமாண உடன்படிக்கை தொடர்ந்தேர்ச்சியாக அந்நாள் முதல் எண்ணப்பட்டு வருகிறது. (எபி. 8 : 9; எரே. 31 : 32; எசே. 20 : 5, 6).

## ஓய்வுநாள் சிருஷ்டிப்பின் நாட்களில் நியமிக்கப்படவில்லை

**(2)** தேவன் ஓய்வுநாளைச் சிருஷ்டிப்பின் நாட்களில் நியமித்தார். (ஆதி. 2 : 2, 3; யாத். 20 : 11). அது ஆதாரமிக்க கடைப்பிடிக்கப்பட்டு, பின்னும் மோசேயால், மறுபடியும் சொல்லப்பட்டு நியாயப்பிரமாணத்தின் மூலமாக கட்டாயப்படுத்தப்பட்டது - என்பது செவன்த் டே அட்வென் டிஸ்டுகளின் கூற்றாகும்.

**பதில் :** இக்கருத்து தவறு. சிருஷ்டிப்பின் வாரத்தில் ஏழாம் நாளில் தேவன் ஓய்ந்திருந்தாரென்றும், அதை அவர் ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கினார் என்றும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு வார்த்தை கூட அவர் ஏழாம் நாளை கட்டளையிட்டாரென்றும் நியமித்தாரென்றும் இஸ்ரவேலருக்கு இதனைக் கொடுக்கும் காலம்வரை சொல்லவில்லை. மாறாக, இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு புறப்படுவதற்கு முன் 2000 ஆண்டுகளாக ஓய்வு நாளைக் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் நமக்கு சொல்லப்பட்டிருக்கிறபடி, 2000 ஆண்டுகளுக்கு பிறகு மேற்கூறியபடி, ஓய்வுநாள் அந்த தேசத்தாருக்கு நியமிக்கப்பட்டது. அது அவர்கள் விடுவிக்கப்பட்டதின் ஞாபகார்த்தமாகும். இதை முழுவதுமாக பார்த்தால், இது ஏதோ இஸ்ரவேலுக்கு புதிதாயிருக்கிறது. யாத். 16 : 20-30-ல் ஓய்வு நாள் சம்பந்தமாக கொடுக்கப்பட்ட விளக்கமும், இக்கட்டளையை முதல் முதலில் அது மீறப்பட்டபோது என்ன செய்யவதென்று அறியாதிருந்த மோசேயின் நிச்சயமற்ற தன்மையும் ஓய்வு நாளானது இஸ்ரவேலருக்குப் புதியது என்பதைத் தெளிவாக நிரூபிக்கிறது. (எண். 15 : 32-36). அதனைக் குறித்து அவர்களோ அல்லது அவர்களின் முற்பிதாக்களோ முன்னமே அறிந்ததில்லை. ஆதியாகம புஸ்தகம் மோசேயால் எழுதப்பட்டது. அவர் ஏழாம் நாள் ஓய்வுநாள் என்பதை நியாயப்பிரமாணத்தில் கட்டளையிடப் பட்டது என்றும் முற்காலங்களில் அது இல்லை என்றும் மிக தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், தேவன் தம்முடைய வாரத்தில் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்ததே இஸ்ரவேலர் ஆசரித்த ஏழாம் நாளாகிய ஓய்வு நாளுக்கு முன் நிகழ்ச்சியாக குறிக்கப்பட்டிருக்கிறது. தேவன் ஓய்ந் திருந்த நாளும் கூட 24 மணி நேரம் கொண்ட ஒரு நாளாக இருக்க முடியாது. அதுபோல இஸ்ரவேலர் ஓய்ந்திருக்கக் கட்டளையிடப்பட்டதைப் போன்று அதே விதத்தில் தேவன் இளைப்பாறவில்லை.

இஸ்ரவேலர் ஏழாம்நாளை ஆசரிப்பதில் மிகுந்த சிரத்தையுள்ளவர்களாயிருந்தனர்; ஆயினும் அப்போஸ் தலர் எபி. 4 : 3, 4, 9-11 ஆகிய வசனங்களில், இஸ்ரயேலர் உண்மையான இளைப்பாறுதலுக்குள்ளும் அல்லது ஓய்வுநாளுக்குள்ளும் பிரவேசிக்கவில்லை என விவரிக் கிறார். இதற்கு காரணமென்னவென்றால் அவர்கள் விசுவாசத்தை அப்பியாசப்படுத்தவில்லை என்றும், விசுவாசத்தைப் பயிற்சி செய்வதால் மட்டுமே அந்த இளைப்பாறுதலை அனுபவிக்க முடியும் என்கிறார். "***விசுவாசித்தவரகளாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்.*** (இதனால் நிரந்திரமான ஓய்வை அடைகிறோம்.]" "**அவருடைய இளைப்பாறுதலில்** [விசுவாசத் தின் காரணத்தால் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட இருதயத்தின் இளைப்பாறுதலில்] **பிரவேசித்தவன் தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்தது போல** (கிரியைகள் - தேவன் கிறிஸ்துவுக்காக மீட்பையும் திரும்பக் கொடுத்தலின் கிரியைகளை அவர் செய்வதற்காக விட்டிருக் கிறார். அதனால் நாம் கிறிஸ்துவினால் முடிக்கப்பட்ட கிரியைகளை அங்கீகரித்து எல்லாக் கீழ்ப்படிதலோடும் விசுவாசத்தில் இளைப்பாறுகிறோம்) **தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்** (தனது சுய நீதியான கிரியைகளிலிருந்து ஓய்ந்திருப்பான்.)" நியாயப்பிரமாண உடன்படிக்கை மீது நம்பிக்கையுள்ளவர்கள் அல்லது அதன் தேவைகளை "**பலியின் உடன்படிக்கையாகிய**" (சங். 50 : 5) கிருபையின் பிரமாணத்தில் கலக்கிறவர்கள், முழுமையாக இந்த இளைப்பாறுதலை அனுபவிக்க முடியாது, ஏனெனில், அது பிரதிஷ்டை செய்தவர்களுக்கு மட்டுமே உரியதாகும்.

தேவனுடைய ஓய்வுநாள், 24 மணிநேரம் கொண்ட நாளாயிராமல் 7000 வருடங்கள் கொண்ட ஒரு நாளாயிருக்கிறது. அவருடைய ஓய்வு நாள் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட பின்பு ஆரம்பமானது. ஆதாம் பாவம் செய்தபோது, தேவன் அவனைப் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுவிப்பதற்கு திரும்பக் கொடுத்தல் வேலையை உடனே செய்யாமல், மனிதன் மற்றும் பூமி சம்பந்தமான எந்த வேலையையும் செய்யாமல் ஒய்ந்திருந் தார். ஏனென்றால் கிறிஸ்து மனிதனை மீட்டு, இழந்து போனதைத் திரும்பக் கொடுக்கும் வேலை முழுவதையும் ஏற்க வேண்டுமென்பதால். அனைத்து காரியங்களையும் அதினதின் போக்கிலேயே விட்டுவிட்டார். தேவன், வாக்குத்தத் தங்களையும், அடையாளங்களையும், நிழலானவை களையும் நியாயப்பிரமாணத்திலே கொடுத்தார். ஆனாலும், அவர் மனிதனுடைய இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தல் சம்பந்தமான வேலையைச் செய்யவில்லை. “ஈடுபலி” தான் மனிதனைத் திரும்பப் பெறுவதற்காக செய்யப்பட்ட முதல் வேலையாகும். அந்த ஈடுபலியை இயேசு ஆதாமுக்காகவும் அவன் சந்ததிக்காகவும் செலுத்தினார்.

பரலோகப் பிதா இதுவரை 6000 வருடங்களாக ஓய்ந்திருக்கிறார்; அவர் கிறிஸ்துவின் அரசாட்சி காலமாகிய 1000 வருடமளவும் இன்னும் ஓய்ந்திருப்பார். அவருடைய அரசாட்சி முடியுமளவும் அதாவது அவர் ஆட்சிசெய்து தேவனும் பிதாவுமானவருக்கு அவர் ராஜ்யத்தை ஒப்புக்கொடுக்கும் வரைக்கும் ஓய்ந்திருப்பார். இவ்விதமாக நமக்கு சிருஷ்டிப்பின் காலத்தின் அளவைப் பற்றிய திறவுகோல் கிடைத்துள்ளது. இந்த ஏழாம் நாள் 7000 ஆண்டுகள் கொண்ட ஒரு நாளாக இருக்குமென்றால், அதற்கு முன்பதாகவுள்ள 6 நாட்களும் அதே அளவை உடையதாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த காலம் அறிவியல் ஆராய்ச்சிகளின் முடிவுகளுக்கும் நன்கு ஒத்துப் போகிறது. அது தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் மனிதனுடைய சிருஷ்டிப்புவரை விருத்தி யடைவதற்குப் போதுமான காலத்தைக் கொடுக்கிறது. “புது சிருஷ்டி” (Vol. 6 Studies in the scriptures) பாடம் 1-ல் ஆதியாகமத்தில், சிருஷ்டிப்பில் பாறைகள் மற்றும் புவியியல் ஆராய்ச்சி சம்பந்தமாக இவை இசைவிணக்கமாயிருப்பது சொல்லப்பட்டிருக்கிறது. பூமியின் சிருஷ்டிப்பு ஒழுங்குப் படுத்தப்பட்ட ஆதிகாலம் முதல் ஆயிர வருஷ யுக முடிவில் பூமியானது ஒழுங்குப்படுத்தி பூரணப்படுத்தப்பட்ட நிலையில் பிதாவிடம் ஒப்படைக்கப்படும் காலம் வரைக்கும் 7x7000 வருடங்கள், மொத்தம் 49,000 வருடங்களாகும். ஐம்பதாயிரமாவது அல்லது மாபெரும் யூபிலி பெரிய அளவில் அதன் பின்பு ஆரம்பமாகும். அது யூதருடைய யூபிலியோ அல்லது பொதுவான இழந்துப் போனதைத் திரும்ப கொடுத்தலாகிய யூபிலியுமல்ல; ஆனால் அது பூமியினுடைய யூபிலியாகும்.

## நீதிப் பிரமாணமும் கட்டளைகளும்

**(3)** ஓய்வுநாளைக் கடைபிடித்தல் என்ற கட்டளை மற்ற ஒன்பது கட்டளைகளுக்கும் தொடர்புடையது. அது எல்லா மனிதரையும் எல்லா காலங்களிலும் கட்டுக்குள் வைக்கிறது – என்பது செவன்த் டே அட்வென்டிஸ்டுகளின் கூற்றாகும்.

**பதில் :** தேவன் மோசேக்கும் இஸ்ரவேலருக்கும் பத்து கற்பனைககளைக் கொடுப்பதற்கு முன்னே ஓர் நீதிப் பிரமாணத்தை வைத்திருந்தார்; அது மனிதனுடைய சுபாவத்திலேயே பொறிக்கப்பட்டிருந்தது. ஆதாம் மற்றும் ஏவாளின் இருதயத்தில் எழுதப்பட்டிருந்த அந்த நீதிப் பிரமாணம் என்னவென்றால் தேவனைப் பிரதானமாக அன்பு கூர வேண்டும் என்றும் மனிதனைச் சமமாக அன்பு கூர வேண்டும் என்பதாகும். ஆதாமின் சந்ததியாரிடமும் அவர்கள் எவ்வளவுதான் விழுந்துபோயிருந்தாலும் நீதிப் பிரமாணம் அவர்கள் இருதயத்தில் இன்னும் இருக்கிறது. ஆனால், ஓய்வு நாளைப் பற்றிய பிரமாணம் அவர்கள் இருதயத்தில் இருந்ததற்கான எந்த ஒரு அடையாள முமில்லை; ஏனெனில், அது நம்முடைய ஆதி பெற்றொரின் இருதயங்களில் எழுதப்பட்ட நீதிப் பிரமாணத்தின் ஒரு பகுதியாய் இருந்ததில்லை. மேலும், நான்காவது கட்டளை ஒரு நீதிப் பிரமாணமல்ல; ஆனால் ஓய்வு நாளன்று எந்த வேலையும் செய்ய கூடாது என்று மாத்திரம் கூறும் கட்டளையாகும்; அப்போஸ்தலர் பவுல் கூறுகையில் அதனை ஆசரிப்பதிலோ அல்லது ஆசரிக்காமலிருப்பதிலோ ஒரு காரியமில்லை என்கிறார். (ரோம. 14 : 5, 6). என்றாலும், கிருபையின் உடன்படிக்கையின் அன்பின் பிரமாணத்தில் அதற்கு இணை அல்லது நிறைவேறுதல் இருக்கிறது. ஏற்கெனவே காண்பித்தப்படி, கிறிஸ்தவனுடைய விசுவா சத்தில் இளைப்பாறுதலே கிருபையின் உடன்படிக்கையின் நிறைவேறுதலாகும்.(எபி. 4 : 1-11). எளிய யூதனானவன் இத்தகையதோர் இளைப்பாறுதலை அனுபவித்ததில்லை. மாறாக, அவர்களுடைய அனுபவங்களைக் குறித்து தாம் கூறுகையில் “**நிர்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?**” என அப்போஸ்தலர் விவரிக்கிறார். (ரோம. 7 : 24). அவர்க ளுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையில் கொடுக்கப் பட்டுள்ள நான்காவது கற்பனையானது இருதயத்தின் உண்மையான இளைப்பாறுதலின் ஓர் நெருங்கிய கருத்தாகும். ஆனால் அது வெறும் அடையாளமே.

## அனைத்து பிரமாணங்களும் உள்ளடங்கும் ஒரே உடன்படிக்கை

**(4)** இஸ்ரவேலுக்கு இரண்டு பிரமாணங்கள் கொடுக்கப்பட்டன. ஒன்று சடங்கு மற்றும் ஆசரிப்பு முறை மற்றொன்று நீதிப்பிரமாணம். சடங்கு ஆசரிப்பு முறையான பிரமாணம் கிறிஸ்துவால் நிறைவேற்றப்பட்டு முடிந்தது, ஆனால் நீதிப்பிரமாணம் இன்னும் நடைமுறையில் உள்ளது -என்பது சவண்த் டே அட்வெண்டிஸ்டிகளின் கூற்றாகும்.

**பதில் :** இந்த வகையான பிரிவுகள் பற்றி வேத வாக்கியங்களில் எந்த ஆதாரமும் இல்லை. மாறாக, அங்கு ஒரே ஒரு பிரமாணமே உள்ளது, அதின் ஆசரிப்பு அம்சங்கள் நீதிப் பிரமாணத்தை மீறுவதால் வரும் பாவங்களை விட்டு சுத்தமாக்குவதை அடையாளமாக அருளுகிறது. அதனை மோசே மத்தியஸ்தம் பண்ணிய உடன்படிக்கையாக பார்த்தோமானால் அதின் எல்லா பகுதிகளும் ஒன்று கண்டிப்பாக சேர்ந்து நிற்கும் அல்லது எல்லாம் சேர்ந்தே விழும் என்பது தெரிகிறது. யாத். 34 : 28; உபா. 4 : 13; 14 : 5-ஐ; எபி. 8 : 6-8-டோடு ஒப்பிட்டு பார்த்த பின்பு, பத்து கற்பனைகளும் உடன்படிக்கையின் ஒரு பகுதியாக கிருபையின் உடன்படிக்கையின் மூலமாக சபைக்கு அளிக்கப்பட்டது என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க வேண்டியதில்லை. ரோம. 7 : 7-ல் பத்து கட்ளைகள் நியாயப்பிரமாணத்தின் ஓர் பகுதியாக இருக்கிறது என நிரூபிக்கிறது. அப்போஸ்தலர் பவுல் வச. 6-லும் மற்றும் அந்த அதிகாரம் முழுவதும் கிறிஸ்துவின் மூலமாய் நியாயப்பிரமாணத்தின் கீழிருப்பவர்களை விடுதலையாக்குவதைப் பற்றி காட்டுகிறார். "**பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக**" என்ற பிரமாணம் பத்து கட்டளைகளில் அடங்கியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இந்த பிரமாணத்திலிருந்து கிறிஸ்து பவுலை விடுதலையாக்கினார். (ரோம. 8 : 1-4).

நியாயப்பிரமாணத்தைக் குறித்துப் புதிதாக மனமாறிய புறஜாதிகளுக்கு அப்போஸ்தலர்கள் எழுதும் போது, நியாயப்பிரமாணத்தின் நுகத்தை புறஜாதிகள் மீது சுமத்தப்படலாகாது, ஏனெனில் யூதர்கள் தாங்களே நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்க முடியவில்லையே. சிலர், புறஜாதிகளும், "**கண்டிப்பாக விருத்தசேதனம் பண்ண வேண்டுமென்றும், நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும்,**" என்று கூறும் போதகர்களுக்கு எதிரிடையாக எழுதியுள்ளார். பரி. பேதுரு மோசேயுடைய நியாயப்பிரமாணத்தைப் பற்றி அவர்கள் கூறியதை, "ஓய்வு நாட்கள்தோறும் நியாயப்பிரமாணமானது ஜெப ஆலயங்களில் வாசிக்கப்பட்டு வருகிறதே" என்று சுட்டிக்காட்டியுள்ளார். (அப். 15 : 9-11, 24, 28, 29, 19-21).

## நியாயப்பிரமாண உடன்படிக்கையை கிறிஸ்து நிறைவேற்றினார்

**(5)** அவர் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் அழிப்பதற்காக அல்ல, மாறாக அதை நிறைவேற்றுவதற்காகவே வந்தார் என்று கிறிஸ்து கூறினார். (மத். 5 : 17).

**பதில் :** ஆம், கிறிஸ்து நியாயப்பிரமாண உடன்படிக்கையை நிறைவேற்றினார். அதின் எல்லா தேவைகளையும் பூர்த்திசெய்து, வாக்களிக்கப்பட்ட வெகுமதியாகிய ஜீவனைப் பெற்றார். இவ்வாறாக அவர் அதை நிறைவேற்றினார். நியாயப்பிரமாணம் எதற்காக உருவாக்கி கொடுக்கப்பட்டதோ அது நிறைவேறியதால், இது முடிவுக்கு வந்தது.

## "ஓய்வுநாள் மனுஷனுக்காக உருவாக்கப்பட்டது"

**(6)** "**மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது**" (மாற். 2 : 27). அதனால் ஓய்வுநாள் சகல மனுக்குலத்திற்காக உண்டாக்கப்பட்டது என்று நாங்கள் அறிகிறோம்- என்பது செவன்த் டே அட்வென்டிஸ்டுகளின் கூற்றாகும்.

**பதில் :** உங்கள் தாற்பரியம் நியாயம்மிகுந்ததாக இல்லை. ஓய்வு நாள் எல்லா மனுக்குலத்திற்குமுரியதென்றால், அது எல்லா மனுஷருக்கும் கண்டிப்பாக, தெளிவாக சொல்லப்பட்டிருக்க வேண்டும். ஆனால் உண்மை என்னவென்றால் இக்காரியம் ஒரே ஒரு தேசத்திற்கு மட்டும் விதிக்கப்பட்டது ஆகும். அதனால் தான், கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் கூட இதைக் கட்டளையிடவில்லை. இந்த வாக்கியத்தில் நமது ஆண்டவர் இந்த கட்டளை கொடுக்கப்பட்ட யூதர்களிடமே அவர்கள் இந்த கட்டளைக்கு முற்றிலுமாக வேறு கருத்து அர்த்தம் வைத்து ஓய்வு நாட்களில் ஒரு சக சிருஷ்டிக்கோ, எருதுக்கோ அல்லது கழுதைக்கோ நன்மை செய்ய மறுத்தனர் என்று அவர்களுக்குக் காண்பித்தார். ஓய்வு நாளை கடைப்பிடிப்பவர்களுக்கு ஆசீர்வாதத்தை கொடுக்கும்படியான நோக்கத்தில் யாருக்கு கட்டளையிடப்பட்டதோ அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த நாளை ஓர் தேசம் சாதாரணமாக ஆசரிப்பதற்காக அவைகள் உண்டாக்கப்படவில்லை.

## ஒரு ஓய்வு நாள் முதல் மற்றொரு ஓய்வு நாள்

**(7)** ஏசா. 66 : 23-யில்; ஓய்வுநாளானது புதிய வானத்திற்கும் புதிய பூமிக்கும் தொடர்புடையதாயிருப்பதால் அது நமக்கு நித்திய காலத்திற்கும் கடைபிடிக்க வேண்டிய ஒன்றாகும் - என்பது செவன்த் டே அட்வென்டிஸ்டுகளின் கூற்றாகும்.

**பதில் :** ஆயிர வருஷ யுக அரசாட்சியின் தொடக்கத்தில், தேவனுடைய செயல்பாடுகள் மனுக்குலம் முழுவதும் நடைபெறும். அதன்பின், இழந்து போனதைத் திரும்ப கொடுக்கும் வேலையிலும் பரீட்சைகளிலும் அவருடைய செயல்பாடுகள் இஸ்ரவேல் என்ற பணிவிடைக்காரரின் வீட்டோடு இருந்தது போலவே ஒத்திருக்கும். அப்பொழுது அவர் ஓய்வு நாளையும் பல்வேறு பண்டிகைகளையும் குறித்த பிரமாணங்களை மறுபடியும் நிலைப்படுத்துவார். எனினும், முன்பு அடையாளமான இஸ்ரவேலின்மேல் வைக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கை இனி ஒருபோதும் உலகத்தின் மீது வைக்கப்படமாட்டாது என நிச்சயிக்கலாம்; ஏனெனில், அது எதையும் பூரணப்படுத்தவில்லை. நீதியானது இனி நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மூலமாக பிறருக்கோ அல்லது இனி இஸ்ரவேலுக்கோ வராது. பாவத்தை விட்டு விடுதலையாக்கப்பட்டு தேவனோடு இசைந்திருக்க விரும்புகிற யாவருக்கும் ஆயிர வருட யுகம் முழுவதும் புது உடன்படிக்கையானது திறந்தேயிருக்கும்.

ஆனால் அந்த காலகட்டத்தில், ஆபிரகாமின் வித்தின் தெரிந்தெடுப்பு முடிவதால் (கலா. 3 : 8, 16, 26) அதன் பின்பு ஒருவரும் அந்த வாக்குதத்தத்தின் உடன் சுதந்திரராகும் சிலாக்கியத்தைப் பெறமுடியாது; ஆனால் அந்த வித்தி லிருந்து பாய்ந்தோடி வரும் ஆசீர்வாதங்களின் கீழ் இருக்கலாம்.

"ஒரு அமாவாசையிலிருந்து மற்றொரு அமா வாசை என்பதும், ஒரு ஓய்வு நாள் முதல் முற்றொரு ஓய்வு நாள்" என்பதும் யூதருக்குப் பொதுவாக ஒரு மாதத்திலிருந்து மற்றொரு மாதத்தையும், ஒரு வாரத்திலிருந்து மற்றொரு வாரத்தையும் குறிக்கும். ஆனால் அவைகள் எவ்வித விசேஷித்த ஆசரிப்பின் நாட்களோடும் சம்பந்தப்பட்டு இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. செவன்த் டே அட்வென்டிஸ்டுகள் நிச்சயமாகவே ஓர் உலகளாவிய வேலை செய்கிறார்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப் பட்டுள்ள தீர்க்கதரிசனத்தின்படி, சரியோ தவறோ ஆனால் உலக அளவில் செய்கிறார்கள். இஸ்ரவேலின் பத்து கற்பனைகளுள் நான்காவதான கட்டளையினால் தாங்கள் மட்டுமே இயேசுவில் விசுவாசமுள்ளவர்களென்றும் தேவனுடைய கட்டளைகளின் சிறந்தவர்கள் என்றும் கோருவது அபத்தமானதாகக் காணப்படுகிறது. பலியின் உடன்படிக்கையின் கீழிருக்கும் சுவிசேஷ யுக சபைக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய கட்டளை என்னவெனில், "**இவர் என்னுடைய நேச குமாரன், இவருக்குச் செவி கொடுங்கள்**" என்பதே. (மாற். 9 : 7). அவரோ அல்லது அவர் அனுப்பிய அவருடைய விசேஷமான ஸ்தானாபதிகளோ, பிரதிநிதி களோ ஏழாம் நாளை ஆசரிக்க வேண்டுமென்று ஒருபோதும் ஒரு வார்த்தையும்கூட சொன்னதில்லை.

## ரோமானியர்கள் ஞாயிற்றுக் கிழமையில் ஆசரிப்பதை ஆரம்பிக்கவில்லை

**(8)** ரோமன் கத்தோலிக்க சபை ஞாயிற்றுக் கிழமையை கடைப்பிடிப்பதை தோற்றுவித்தது. இது வேத வாக்கியங் களின்படி சற்றும் ஆதாரமில்லாததால் அதனை மாற்றுவதற்கு உரிமை இருக்கிறது – என்பது செவன்த் டே அட்வென்டிஸ்டுகளின் கூற்றாகும்.

**பதில் :** ரோமன் கத்தோலிக்க சபையானது தங்கள் சொந்த தேவைகளுக்காக எக்காரியமானாலும் சடுதியாக தன் காரியமாக மாற்ற பெலனுடையதாயிருந்தது. இது ஒன்றே விசேஷித்த நல்ல வாய்ப்பை உருவாக்கியது. ஞாயிற்றுக் கிழமை தான் ஓய்வு நாள்ளென்றோ அல்லது ஏழாம் நாள் தான் ஓய்வு நாளென்றோ புதிய ஏற்பாட்டில் எங்கும் கட்டளையிடப்படவில்லை. ரோமன் கத்தோலிக்க உபதே சத்தை ஸ்தாபிப்பதற்கு இது மிக சிறந்த சந்தர்ப்பமாக அமைந்தது. பாரம்பரியமானது தேவனுடைய வார்த்தை யோடுகூட சம அதிகாரத்தை உடையதாயிருந்தது. போப்பு மார்க்கம் ஏழாம் நாளாகிய ஓய்வு நாளை முதல் நாளாகிய ஞாயிற்று கிழமைக்குக் காரணமின்றி மாற்றியது. சரி, மாற்றியதற்கு ஆதாரம் எங்கே? எங்குமில்லை. சுவிசேஷ யுக சபைக்கு தேவன் ஒரு நாளை மட்டும் ஓய்வாகக் கொடாமல் எல்லா நாட்களையுமே அதாவது ஒவ்வொரு நாளையுமே ஓய்வாகக் கொடுத்தார். ஆதிகால சபையானது தங்களுடைய அனுகூலத்திற்கு ஏற்றவாறு இந்த இரண்டு நாட்களிலும், சில சமயங்களில் ஒரு நாளிலும் கூடினார்கள். (வாரத்தின்) முதல் நாளில் கூடுகை, நாளடைவில் வழக்கமானதாக மாறியது. யூத ஓய்வு நாளை கிறிஸ்தவ ஞாயிறாக மாற்றியதற்கு ஆதாரமாக எந்த கூட்டத்தில் (Council) தீர்மானமெடுக்கப்பட்டதென்றும், மாற்றிய அந்த நாளையும் பாப்பு மார்க்கம் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுடைய ஒரு புத்தகத்தில், "The catholic christian instructed" என்ற தலைப்பில் வினா–விடை மூலமாய் பதிலளித்ததில், "சபையானது பரிசுத்தமாக கடைப்பிடிக்க வேண்டிய நாட்கள் எது?" என்ற கேள்விக்குப் பதிலளித்ததில், "ஞாயிற்று கிழமை, அது நமது கர்த்தரின் நாள், இதை ஓய்வு நாளுக்கு பதிலாக அப்போஸ்தல பாரம்பரியத்தின்படி நாம் ஆசரிக்கிறோம்." என்கின்றனர்.

**(9)** ஞாயிற்றுக் கிழமை என்ற பெயர், புறமதத்தைச் சார்ந்தது. சந்தேகமின்றி, இந்த நாளில் ஒரு காலத்தில் சூரியன் வழிபடப்பட்டது. அதனால் அந்த நாள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நாளாக இருக்கக் கூடாது. அந்த பெயரும் உபயோகிக்கப்பட கூடாது – என்பது செவன்த் டே அட்வென்டிஸ்டுகளின் கூற்றாகும்.

**பதில் :** சில தேவ நம்பிக்கையற்றவர்கள் ராபர்ட் என்றும் தாமஸ் என்றும் பெயர் வைத்திருக்கலாம், அவர்களுடைய அந்த பெயரை உனக்கு கொடுப்பதால் அது உன்னைத் தேவ பக்தியற்றவனாக ஆக்கிவிட முடியாது. அதனால் வாரத்தின் முதல் நாளிலோ அல்லது வேறு எந்த நாட்களிலோ தேவனை தொழுது கொள்வது என்பது அதன் பொதுவான பெயரால் ஆதிக்கம் செலுத்தப்படுவதில்லை. நமக்கு அதின் பெயரை குறித்து – அதாவது, கர்த்தருடைய நாளென்றோ அல்லது ஓய்வு நாளென்றோ அல்லது ஞாயிற்று கிழமையென்றோ நமக்கு விசேஷித்த தெரிந்தெடுக்கப்பட்ட பெயர் இல்லை. எந்த நாளாயிருந்தாலும், ஒரு பெயரையோ அல்லது வேறு பெயரைக் கொண்டதாயிருந்தாலும் அந்த நாளில் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளலாம். ஓய்வு நாள் (sabbath) என்பது ஒரு நல்ல பெயர், அது நமது எஜமானரின் அடிச்சுவட்டை பின்பற்றும் யாவருக்கும் கிறிஸ்துவின் பலியிலும், தேவனுடைய விலையேறப்பட்ட வாக்குத்தத்தங்களையும் விசுவாசிப்பதின்மூலம் வரும் இளைப்பாறுதலை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. கர்த்தரு டைய நாள் என்பதும் நல்லதே, வாரத்தின் முதல் நாளானது ஆண்டவரின் உயிர்த்தெழுதலால் கிடைத்த தெய்வீக தயவின் மாபெரும் ஞாபகார்த்தத்தைக் குறிக்கிறது என்பதை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. ஞாயிற்றுக் கிழமையானது நமக்கு நீதியின் சூரியனையும், எழுந்த நமது ஆண்டவரையும்,

நாமும் முழு உலகமும் அவர் மூலமாய் தற்பொழுது பெறுகிற ஆசீர்வாதங்களையும் பெறப்போகிறதையும் ஞாபகப்படுத்து கிறது. (மல். 4 : 2). நம்முடைய இருதயம் சரியாக இருந்தால், இத்தகைய எந்த பெயரும் நமக்கு கிறிஸ்துவின் மூலமாய் தேவனுடைய கிருபையான விலையேறப்பட்ட நினைவு களோடுகூட இனிய வாசனையுடையதாக இருக்கும்.

## இதுவரை பார்த்த விஷயங்களின் சாராம்சம்

சில முடிவுரைகளை கீழே தொகுத்துக் கொடுத்துள்ளோம்:

**(1)** "ஓய்வு நாள்" என்ற வார்த்தையானது இளைப்பாறுதலின் நாளைக் குறிக்கிறது.

**(2)** ஆதலால் எந்தவொரு இளைப்பாறுதலின் நாளையும் ஓய்வுநாள் என ஏற்ற தன்மையுடன் அழைக்கலாம். உண்மையில் இதுவே யூதருடைய வழக்கமாக இருந்தது. அவர்களுடைய எல்லா பண்டிகை நாட்களையும் இளைப்பாறுதலின் நாளாகவும் ஓய்வு நாள் எனவும் அழைத்தனர். உதாரணமாக, பஸ்காவின் முதல் மற்றும் இறுதி நாட்களை ஓய்வு நாள் என்றே அழைத்தனர். முதல் மற்றும் கடைசி நாட்கள் வாரத்தின் எந்த நாளில் அமைந்தாலும் அது ஓய்வுநாட்கள் என்றே அழைக்கப்பட்டது.

**(3)** ஓய்வுநாளானது இஸ்ரவேலருக்கு இரண்டு கற்பலகைகளில் கட்டளையிடப்பட்டிருந்தது. அது முதல் நாளிலோ அல்லது வேறு ஏதோ ஏழு நாட்களில் ஒரு நாளிலோ கொடுக்கப்படவில்லை; மாறாக, வாரத்தின் ஏழாம் நாளில் சீனாய் மலையில் தேவனால் இஸ்ரவேலருக்கு மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. இது குறிப்பாக ஆறாம் நாளில் கூடுதலாக மன்னா பொழிந்ததில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

**(4)** இஸ்ரவேலைக் குறித்து பார்க்கும்போது, வாரத்தின் எந்த நாளாயிருந்தாலும் அது அவர்களுக்கு அனுகூலமானதாக இருந்திருக்கும். தேவனே அந்த நாளை தெரிந்தெடுத் ததால். அவர் தெரிந்துகொண்ட அந்த ஏழாம் நாளானது தேவனுடைய அனைத்து ஒழுங்குகளுக்கும், அடையாள மான ஜனங்களுக்கும் வெளிப்படையாக அடையாளமா யிருக்கிறது. இது ஆவிக்குரிய இஸ்ரயேலர் அனுபவிக்கிற இளைப்பாறுதலை அடையாளப்படுத்துகிறது என நாம் அறிகிறோம். இதனை அப்போஸ்தலர் எபி. 4 : 9, 10-ல் குறிப்பிட்டுள்ளார்.

**(5)** இந்த நான்காம் கட்டளையும் மற்ற பத்து கட்டளைகளைப் போலவே சேர்த்துக் கட்டுகிறது. எல்லா கட்டளைகளும் கொடுக்கப்பட்ட மாம்ச இஸ்ரவேலருக்கு, எப்படி மற்ற கட்டளைகள் யாவும் அவர்களுக்கு எதிராகத் தொடர்ந்து நிற்கிறது போலவே இந்த கட்டளையும் அப்படியே எதிராக நிற்கிறது. பத்து கட்டளைகளில் நான்காவதோ அல்லது மற்ற எந்த கட்டளைகளோ இஸ்ரவேலுக்குத் தவிர வேறு எந்த தேசத்தவருக்கும் பிரமாணமாகவோ அல்லது கடைபிடிக் கவோ கொடுக்கப்படவில்லை. இஸ்ரவேலராக விருத்த சேதனம் செய்கிறவர்கள் தவிர வேறு யாரும் அதின் பலனின் கீழ் வந்தடைய முடியாது .

**(6)** இந்த பத்து கற்பனைகளும் தேவனுக்கும் இஸ்ர வேலுக்குமுள்ள உடன்படிக்கையின் அதாவது நியாயப் பிரமாண உடன்படிக்கையின் அஸ்திவாரமாக இருந்தது. (உபா. 4 : 13).

**(7)** கிறிஸ்துவின் மரணம் முதற்கொண்டு, தேவனுக்கும் மற்றும் தம்முடைய பிள்ளைகளென அவர் அங்கீகரிக் கிறவர்களுக்கும் இடையில் "கிருபை" என்ற ஓர் ஒழுங்கு இயேசுவை பின்பற்றுகிறவர்களுக்கு பெந்தேகோஸ்தே நாள் முதல் கிரியை செய்து வருகிறது. அதனுடைய அனுகூலங் களும், நன்மைகளும் ஒரே ஜாதிக்கோ அல்லது மனுக்குலத்தின் ஒரு வம்சத்திற்கோ மட்டுமல்ல, ஆனால் கிறிஸ்துவின் வழியாய் தங்களுடைய ஜீவியத்தை அவருக்குப் பிரதிஷ்டை பண்ணி, தேவனிடத்தில் வந்தடைய விரும்பும் யாவருக்கும் கிறிஸ்துவில் கொண்டுள்ள விசுவாசத்தின்மூலம் அது திறந்திருக்கிறது. யூதரும், புறஜாதிகளில் சிலரும் தேவனோடு ஐக்கியங்கொள்ளும்படி தங்களுடைய பாவத்தின் நிவாரணமாகவும், தேவனோடு இசைந்திருக்கவும், வெளிப்படையாக தொடர்புகொள்ளவும் தொடர்ந்தேர்ச்சியாக ஏதேனும் செய்யும்படியாக போராடு கின்றனர். ஆனால் அநேகர் "**வருத்தப்பட்டு பாரஞ்சுமக் கிறவர்களாயிருந்து**" தங்களுடைய தோல்விகளால் கிட்டத்தட்ட மனமடிவாகிப் போகிறார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து நமதாண்டவர் "**என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்**" என்கிறார். (மத். 11 : 28).

## அன்பே புதிய கட்டளையாகும்

**(8)** நியாயப்பிரமாண உடன்படிக்கையானது பத்து கட்டளைகளை அஸ்திவாரமாக கொண்டிருந்தது போல், கிருபையின் உடன்படிக்கையானது "**அன்பு பிரமாணம்**" என்ற புதிய பிரமாணத்தை அஸ்திவாரமாகக் கொண்டிருக்கிறது. "**நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்: நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.**" (யோவா. 13 : 34). இந்த புதிய கட்டளை யானது பழைய உடன்படிக்கையின் பத்து கட்டளைகளோடு பதினொன்றாவதாகக் கூட்டப்படவில்லை, ஆனால் நியாயப் பிரமாண உடன்படிக்கையின் பத்துக் கற்பனைகளின் இடத்தை எடுத்துக் கொண்டது. அது கூடுதலாக அனைத் தையும் உள்ளடக்கியதாகும். கிருபையின் உடன் படிக்கையின் ஒரே கட்டளை அன்பாகும். அந்த உடன் படிக்கையின் கீழ் வருபவர்களுக்கு மட்டுமே அது நிலைத்திருக்கிறது. பொதுவான உலகத்திற்கு சபையின் உடன்படிக்கையிடம் பங்கில்லை. சபையின் உடன்படிக் கையின் சிலாக்கியங்களிலோ, அதின் ஆசீர்வாதங் களிலோ, அதின் பிரமாணங்களிலோ, பொதுவான உலகத்தார்க்கு எப்படி நியாயப்பிரமாண உடன்படிக்கை யிலும் பத்து கட்டளைகள் முதலியவற்றிலும் எந்த ஒரு பங்குமில்லையோ அதுபோல இவைகளிலும் இல்லை. நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இருப்பவர்கள் மட்டுமே அதன் மூலம் கட்டப்பட்டிருக்கிறார்கள்; அதைப் போலவே கிருபையின் உடன்படிக்கையின் கீழ் இருப்பவர்கள் மட்டுமே அதனால் அங்கீகரிக்கப்படுவார்கள். இனி குறித்த காலத்தில் கிறிஸ்துவின் ஆயிர வருஷ யுகத்தின் கீழ் உலகமானது செயலாற்றப்பட்டு,

விருப்பமுள்ளவர்களும் கீழ்ப்படிகிற அனைவரும் புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையினால் ஆசீர்வதிக்கப் படுவார்கள்.

**(9)** உலகத்திலுள்ள பொதுவான ஜனங்கள் தற்பொழுது தேவனால் அங்கீகரிக்கப்படவில்லை. அவர்கள் "**இவ் வுலகத்தின் பிள்ளைகள்**" என்றும் "**பிசாசின் பிள்ளைகள்**" என்றும் "**கோபாக்கினையின் பிள்ளைகள்**" என்றும் அழைக் கப்படுகிறார்கள். அவர்கள் "**ஒரு மனிதனுடைய கீழ்ப்படியாமை**" யினால் வந்த "**உலகத்தின் மேலுள்ள தண்டனைக்குத் தப்பித்து கொள்வதில்லை,**" என நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் தற்பொழுது இருக்கிற கிருபையின் உடன் படிக்கையின் பலன்களினாலோ அல்லது ஆயிர வருடத்தில் புதிய உடன்படிக்கையினாலோ அல்லாமல் வேறு எவ்விதத்திலும் தப்பித்துக் கொள்ள முடியாது. (தேவனுடைய உடன்படிக்கையின் ஜனங்களைத் தவிர) "**உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது.**" (1 யோவா. 5 : 19). உலகம் ஒரு காலத்தில் ஒரு பிரமாணத்தைத் தேவனிடமிருந்து பெற்றிருந்தது; ஆனால் அவர்கள் அதின் பெரும் பகுதியை கிட்டதட்ட முழுவதையுமே தொலைத்துவிட்டார்கள்; இப் பொழுதோ அந்நியரும், பரதேசிகளுமாக அவரால் அங்கீகரிக்கப்படாதவர்களானார்கள். (ரோம. 1 : 21; எபே. 2 : 19). ஆதியான அந்தப் பிரமாணம் கற்பலகைகளில் எழுதப்படவில்லை, மாறாக, அது மனிதனுடைய ஒவ்வொரு குணசாயலிலும் பொறிக்கப்பட்டிருந்தது. தேவனுடைய சாயலில் மனிதன் அப்பொழுது இருந்தபோது, அவன் நன்மை இன்னதென்றும் தீமை இன்னதென்றும் இயற்கையாகவே அறிந்திருந்தான். அவனுடைய மனசாட்சியே அவனுக்கு சிறந்த பாதுகாவலாகவும் வழிகாட்டியாகவும் இருந்தது. ஆனால் இப்பொழுது சாத்தானின் கீழ், பாவம் மற்றும் மரணத்தின் அடிமைகளாக 6000 ஆண்டுகளாக கீழ்நோக்கியே போவதால், மனிதனுடைய இருதயத்திலிருந்த அந்த ஆதியான பிரமாணமானது கிட்டதட்ட முற்றிலுமாக அழிந்துவிட்டது. அது அவனுடைய சீர்தூக்கிப் பார்க்கும் குணத்தையும் மனசாட்சியையும் கோணலாக்கி அவனுடைய மனதை மிருகத்தனமாக காரியங்களும் பயங்களும் உபயோகிக்கும் விளையாட்டுப் பொருள் ஆக்கிற்று.

**(10)** புறஜாதிகள் தாங்களாகவே விரும்பித் தேர்ந்தெடுத்து ஒருவேளை விருத்தசேதனத்தினாலும் நியாயப்பிரமாண உடன்படிக்கையை கடைப்பிடிப்பதினாலும் இஸ்ரவேலராக மனமாறினால், இஸ்ரவேலரோடு உடன் சுதந்திர ராகும்படியாக, அந்த தேசத்தாருக்குரிய எல்லா பலன்களையும் அடையாளமான சிலாக்கியங்களையும் பெறும்படியான வாய்ப்பு புறஜாதிகளுக்கு இருந்தது. ஆனால் புறஜாதிகள் தாமாகவே மனமுவந்து இதனை ஏற்றுக் கொள்ளும்வரை அந்த உடன்படிக்கையின் கீழ் உள்ள ஆசீர்வாதங்களுக்கோ அல்லது சாபங்களுக்கோ கீழ்ப்பட்டிருக்க முடியாது. அதுபோலவே, இப்பொழுது, கிருபையின் உடன்படிக்கையின் சிலாக்கியங்களின் கீழ் சிலர் வருவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது நீதிமானாகுதலின் கீழும், அல்லது பாவங்களுக்கான மன்னிப்பின் கீழும், அல்லது அன்பின் பிரமாணத்தின் கீழும் வருவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதின் நிபந்தனைக்கு இணங்கித் தங்களை அதின் கீழ் வைத்து கொண்டவர்கள் மட்டுமே அதின் ஆசீர்வாங்களுக்கும் அதின் பொறுப்புகளுக்கும் பங்குள்ளவர்களாவார்கள்.

## விசுவாசம் – அனுதினமும் கிறிஸ்துவில் இளைப்பாறுதல்

**(11)** கிருபையின் உடன்படிக்கையின் கீழ் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எந்த ஒரு ஒழுங்கும் செய்யப்படவில்லை. இந்த உடன்படிக்கையின் கீழிருக்கிற எல்லாருக்கும் ஒவ்வொரு நாளும், ஓய்வு நாளாகவும், கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தில் இளைப்பாறும் நாளாகவும் இருக்க வேண்டும். இந்த உடன்படிக்கையின் கீழ் இருப்பவர் களுக்கு மட்டுமே இது அருளப்பட்டது; மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டதல்ல. ஒருநாளை மற்றொரு நாளிலும் விசேஷமாகவும் அதிக பரிசுத்தமானதாகவும் எண்ணு வதைத் தவிர்க்க, ஆதி சபையை அப்போஸ்தலர் பாதுகாக்க ஜாக்கிரதையுள்ளவராயிருந்தார். (ரோம. 14 : 5-8). நம்முடைய கர்த்தருடைய ஊழியமானது நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இருந்தது; அதனால் அவர் ஏழாம் நாளாகிய ஓய்வு நாளை ஆசரித்தது மட்டுமல்லாமல் அவர் ஜனங்களிடம் தாம் "**ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறதாக**" நிச்சயப்படுத்தினார். (மத். 12 : 8). ஆனால் அவரோ அல்லது அப்போஸ்தலர்களோ ஓர் விசேஷித்த நாளை ஓய்வு நாளாக ஆசரிக்க வேண்டுமென்று ஆலோசனையோ அல்லது கட்டளையோ ஒருபோதும் பிறப்பிக்கவில்லை. இந்த அப்போஸ்தலர்களில் ஒருவர், "**தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்திருக் கிறேன்**" என்று அறிவித்திருக்கிறார். இதனால் ஓய்வுநாளை கிருபையின் உடன்படிக்கையிலிருக்கிற அவருடைய குமாரர்கள் ஆசரிப்பது தேவனுடைய ஆலோசனையில் இருந்ததில்லை என்பது நிரூபணமாகிறது. (அப். 20 : 27, 26).

**(12)** ஏழாம் நாளிலிருந்து முதல் நாளிற்கு ஓய்வு நாள் அல்லது இளைப்பாறுதலின் நாள் மாற்றப்பட்டதற்கு எந்தவொரு அதிகாரப்பூர்வமான ஆதாரமும் இல்லை. ஆதிகால சபை அங்கத்தினர்களில் அநேகர் அடை யாளமான நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருந்ததால், நியாயப் பிரமாண உடன்படிக்கை முடிவுக்கு வந்ததென்றும், கிருபையின் உடன்படிக்கை ஆரம்பமாயிற்றென்றும், ஆபிரகாம் உடன்படிக்கையின் சாராள் பகுதி (கலா. 4 : 21-31) கிரியை செய்ய ஆரம்பமாயிற்றென்பதை உணர்ந்துகொள்ள அவர்களுக்குச் சமயம் எடுத்தது. ஆதலால், யூத மயமாக்கும் கருத்துக்களையும், அதின் போதகர்களையும், கிருபையின் உடன்படிக்கையின் அன்பின் பிரமாணத்தையும், சுயாதீனத்தையும், மோசே யின் உடன்படிக்கையாகிய நியாயப்பிரமாணத்தோடு கலக்குகிற அவர்களின் எண்ணத்தையும் அப்போஸ் தலர்கள் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டு வந்தனர். எனினும்

வழக்கம் போல, அவர்கள் ஏழாம் நாளை வழக்கத்தினாலும் சௌகரியத்தாலும் தொடர்ந்து ஆசரித்து வந்தனர். ஏனென்றால் பாலஸ்தீனத்தில் அது தேசிய சட்டமாக இருந்தது. மேலும் அந்த நாளில், சுவிசேஷத்தை கேட்கிற மிகுந்த நம்பிக்கையுள்ள வகுப்பாருக்கு அதனை வெற்றிகரமாக கொண்டு செல்ல முடிந்தது. நம்முடைய கர்த்தர் வாரத்தின் முதல் நாளன்று உயிர்த்தெழுந்து, அதை தொடர்ந்து அவர் தம்மை அந்த நாளில் வெளிப்படுத்தினார். அதனால் ஆதி கால திருச்சபை ஒவ்வொரு முதல் நாளிலும் கூடுவது வழக்கமாயிற்று எனத் தெரிகிறது. அன்று அவர்கள் ஓர் சிறிய உணவையும், ஜெபம் ஏறெடுத்தும், கர்த்தரின் இரக்கங்களை துதித்தும், எழுந்த மீட்பரை நினைவு கூர்ந்தும், அந்த நாளில் அவருடைய வார்த்தைகள் தங்கள் இருதயங்களில் எவ்வாறு கொளுந்துவிட்டு எரிந்தது என்பதை சாட்சி கொடுத்தும், அவருடைய இரத்தத்தின் மூலம் தாங்கள் மீட்கப்பட்டதையும், எப்படி கிறிஸ்து மரிக்க வேண்டிய அவசியமாயிற்றென்றும், மரித்தோரிலிருந்து எப்படி மீண்டும் எழுந்தாரென்றும் அந்நாளில் சிந்தித்தார்கள்.

**(13)** இந்த இனிய வழக்கம் சபையின் மீது எந்தவொரு பிரமாணமுமில்லாமல், வளர்ந்தது. ஏனெனில், கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பு கூர வேண்டுமென்பதைத் தவிர வேறு பிரமாணம் இல்லை என்று அப்போஸ்தலர்கள் அவர்களிடம் உறுதியாகக் கூறினர். அந்த சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்த ஓர் சிலாக்கியமாகவும் பரிசாகவும், கருதி பயனுள்ளதாக உபயோகித்தார்கள். நூறு ஆண்டுகள் ஆவதற்குள், போப்பு மார்க்கம் தவறான கருத்துகளுடன் எழுந்து, உலகமனைத்தையும் வலுக்கட்டாயமாக மதமாற்றமடையச் செய்து, வாரத்தின் முதல் நாளை கர்த்தரின் ஓய்வு நாளாகவும், ஞாயிற்று கிழமையாகவும் ஆக்கி அது சம்பந்தமான சட்டங்களை ஏற்படுத்தியது. திரளான "களைகள்" சபைக்குள் சேர்ந்தார்கள். இந்தக் களைகள் பலியின் உடன்படிக்கையின் அன்பையும் சுயாதீனத்தையும் மதித்துணராத "**பிசாசின் பிள்ளைகள்.**" சில பிரமாணங்களும் ஒழுங்கு முறைகளும் அவர்களுடைய கட்டுப்பாடுக்காக இயற்றப்பட்டன.

**(14)** "***இயேசு கிறிஸ்துவில் விசுவாசமுள்ள***" – "***விசுவாசிகளை***" மட்டுமே கிருபையின் உடன்படிக்கை கட்டுப்படுத்துகிறது. எதையெல்லாம் அன்பு கட்டளையிடுகின்றதோ அவைகளை செய்வதற்கும் ஆசரிப்பதற்கும்இவர்களை முழுவதுமான சுயாதீனத்துடன் செயல்பட அது விட்டுவிடுகிறது; தேவ அன்பு கட்டளையிடுகிற அல்லது அனுமதிக்கிற எதையும் எந்த நாளாயிருந்தாலும் செய்யலாம். அவர்கள் நன்மையையே செய்ய வேண்டும்; எந்த நாளாயிருந்தாலும் அன்பு கட்டளையிடுபவைகளை மீறுவது நல்லதல்ல. மனுக்குல மானது சட்டங்களைக் கொண்டதாக இருக்கிறது. அவருடைய ஜனங்களானவர்கள் அரசாங்க ஆட்சியாளர் களின் அனைத்து காரியங்களிலும் கட்டுப்பட்டவர்களே; ஆயினும் அவருடைய விருப்பம் சம்பந்தமாக தங்கள் மனசாட்சியை மீற கூடாது என்பது அவருடைய ஜனங்களுக்கான தேவனுடைய கட்டளையாகும். அரசாங்க சட்டமானது அன்றாட வேலையிலிருந்து ஓய்வாக ஏதேனும் ஒரு நாளை நியமித்தால் அதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டியது கடமையாக இருக்கிறது. நாம் நேசிக்கும் அவரைத் தொழுது கொள்ளும் படியாகக் கிடைத்த சிலாக்கியத்திற்காகவும், சுயாதீனத் திற்காகவும் நாம் களிகூரலாம். நம்முடைய ஆவிக்குரிய புத்துணர்ச்சிக்காக நாம் சபை கூடுவதை விட்டுவிடாமல் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் ஞானமாக பிரயோகிப் போமாக. (எபி. 10 : 25). அரசாங்கங்களால் ஓய்வு நாள் என்ற ஒன்று ஒதுக்கிவைக்கப்பட்டு இருப்பது நாம் விரும்பும் காரியங்களில் ஒன்றாகும். அதனிமித்தம் மகிழ்ந்து நன்றி கூறுகிறோம். ஏனெனில் அது நமது அருமை மீட்பரின் உயிர்த்தெழுதல் மூலம் தொடங்கிய புதிய ஒழுங்கின் துவக்கத்தை நினைவு படுத்துகிறது. ஆதலால் இது சம்பந்தமாக மனுஷ சட்டங்களை வெளிப்புற நடத்தையில் அங்கீகரிக்கிறோம். ஆனால் நம்முடைய இருதயங்களில் முழு சுதந்திரத்துடன், வாரத்தின் முதல் நாளை விசேஷமாக நன்றியறிதலுடனும் துதியுடனும் குறிப்பாக விசுவாச வீட்டாருக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்யும்படியாக உபயோகிப்பதில் நாங்கள் சந்தோஷப் படுகிறோம்.

## பலவீனமுள்ளவர்கள் இடறிவிடக்கூடாது

"**அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பெலவீனங்களைத் தாங்க வேண்டும்.**" நம்முடைய உடன்படிக்கையின் நிபந்தனை களுக்கு உட்பட்டு கிறிஸ்துவுக்குள் சுயாதீனமுள்ளவர்களான நாம், நம்முடைய சுதந்தரத்தினால் மற்றவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க நாம் கவனமுள்ளவர்களாயிருக்க வேண்டும்; ஏனெனில் அது நமது அன்பு பிரமாணத்தால் கண்டஞ்செய்யப்படும். அப்போஸ்தலர் இதனை ரோம. 14 : 1-15 : 7-ல் தெளிவாக வலியுறுத்துகிறார். விசுவாசத்தில் எல்லாரும் ஒரே மாதிரியான பலமுடையவர்களாய் இருப்பதில்லை என்பதை அவர் குறிப்பிடுகிறார். பலவீனமுள்ளவர்களில் சிலர் கிறிஸ்துவைத் தங்கள் மீட்பர் என கண்டபோதிலும், கிறிஸ்துவிற்குள் தாங்கள் சுயாதீனமுள்ளவர்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடியவில்லை. தன்னுடைய சுயாதீனத்தை உணர்ந்து கொண்டவன் எல்லாவற்றையும் புசிக்கிறான். ஆனால் பலவீனனான மற்றவனோ (கட்டுக்குள் இருப்பவன்) காய்கறிகளை மட்டுமே புசிக்கிறான், இல்லாவிடில் சில பிரமாணங்களை மீறிவிடுவோமோ என்று தனக்குள்ளே எண்ணிக் கொள்கிறான். ஒவ்வொருவரும் மற்றவர்கள் தங்களுடைய முழு சுயாதீனத்தை உணர்ந்துகொள்ள வழிவிட வேண்டும். பலமுள்ளவன் பலவீனனை அற்பமாய் எண்ணாதிருப்பானாக, அதுபோல பலவீனமுள்ளவன் மற்றவர்களைத் தானே நியாயந்தீர்க்காமல் இருப்பானாக. தேவன் பெலவீனமுள்ளவர்களையும்கூட அங்கீகரிக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ளுவதே போதுமானது. அது போலத்தான் நாட்களை விசேஷமாக எண்ணுகிற காரியத்திலும் இருக்கிறது. ஒருவன் ஒருநாளை மற்றொரு நாளை பார்க்கிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் அப்படியே விசேஷமாக எண்ணுகிறான். அவனவன் தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன். பொதுவான மொழிபெயர்ப் பின்படி அநேகர் கருதுகிறபடி ஒருவன் தன் மனதின்படி, அது சரியோ தவறோ எதுவாயிருந்தாலும் அதிலே நிலை

கொண்டிருக்க வேண்டுமென்றோ அல்லது அந்த ஒருவன் மற்றவனைப் போன்றே சரியானவனாகதான் இருக்கிறான் என்றோ அப்போஸ்தலன் இங்கே போதிக்கவில்லை. மாறாக, கிறிஸ்துவின் முழு சுயாதீனத்தில் வளர வேண்டுமென்று அறிவுறுத்துகிறார். மேலும், பலமுள்ள வர்கள் பலவீனமுள்ளவர்களைக் கருத்தில் கொண்டு பொறுமையோடு இருக்கும்படியாக ஆலோசனை கூறுகிறார். அவர் பலமுள்ளவர்களை ஆதரிக்கிறார். மாம்சம் புசிப்பதையும், ஓய்வு நாட்களையும், உபவாச நாட்களையும் குறித்து தான் கட்டுக்குள் இருக்கிறதாக சிந்திக்கிற சகோதரன் ஓர் பலவீனமுள்ள சகோதரன் என பொதுவாகக் குறிப்பிடுகிறார். இத்தகையதோர் கட்டுப்பாட்டை இப்படியொரு பலவீனமுள்ள சகோதரன் கடைபிடித்தாலும், ஆனால் நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்க வேண்டு மென்ற முயற்சியில்லாமல், கிறிஸ்துவினுடைய மீட்கும் பலியை உதறித்தள்ளாமல் தேவனுக்கு முன்பாக தன்னை நீதிமானாக நிறுத்த விரும்பி, அவன் இவ்வாறான காரியங்களால் அவன் கட்டப்பட்டு இருப்பதை நமது மீட்பர் விரும்புவார் என அவன் சிந்திப்பதால் பலமுள்ளவர்கள் இவனுடைய பலவீனங்களைக் குறித்து குற்றமாய் எண்ணாமல் அவனையும் தன் சகோதரனாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒழுக்கமும், அனுபவமும் கிருபை யிலும் அறிவிலும் வளர்ச்சியும் படிப்படியாக அதிக அளவிலான சுயாதீனத்தின் தரத்திற்கு அவனைக் கொண்டு வரும் என நம்ப வேண்டும்.

அப்போஸ்தலர் குறிப்பிடுகின்ற கருத்திற்குள் முழுமையாகப் பிரவேசித்த பலமுள்ளவர்கள், "**மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற் காவது பலவீனப்படுத்துகிறதற்காவது, ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையா யிருக்கும்.**" தங்களுடைய சொந்த மனசாட்சி அனுமதிக் கிறதையும்கூட ஓர் பலவீனமான சகோதரனுக்காக அடக் கினால், அவர்கள் பெரிய ஆசீர்வாதங்களைப் பெறு வார்கள். அவர்கள் தங்கள் எஜமானரின் அடிச்சுவட்டை பின்பற்றுகிறோம் என இன்னும் அதிகமாக அவர்களால் உணர்ந்து கொள்ள முடியும்; "**கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடக்கவில்லை**" (ரோம. 14 : 21; 15 : 2, 3). ஒரு பலமுள்ள சகோதரன் சுடு சொல்லினாலோ அல்லது தன்னுடைய செல்வாக்கினாலோ பலவீனமுள்ளவர்களை அவர்கள் உணர்ந்து கொள்ளாத அவர்களுடைய சுயாதீனத்தை உபயோகிக்கக் கட்டாயப்படுத்தினால், அவர்களைப் பாவத்திற்குள் தள்ளுவது போன்றதாகும். மனசாட்சியின் எந்தவித மீறுதலும் பாவமே. (ரோம. 14 : 23). அதனால் பலவீனமுள்ள சகோதரர்களை அவர்களுடைய சுயாதீன சுதந்திரத்திற்கே விட்டு விட வேண்டும். அவர்களைச் சகோதரர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அன்பும் சத்தியத்தின் ஆதிக்கம் மட்டுமே அவர்களைத் தாங்க முடியும். நம்பிக்கையோடுகூட அவர்களைப் படிப்படியாக பயிற்றுவித்து கிறிஸ்துவிற்குள் விடுதலைபெற்ற மனிதராக தங்களுடைய முழு சிலாக்கியங்களை மதித்துணரத்தக்கதாக அவர்களை உயர்த்த வேண்டும். இவ்விதமாக ஆண்ட வருடைய ஜனங்கள் முழு அன்புடனும் ஒருமைப்பாட்டுடனும் ஒன்றாயிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் மனதின் காரியங்களை ஆண்டவருடைய சித்தத்திற்கு ஏதுவான காரியங்களைச் செய்து, குழந்தையாயிருந்த போதுள்ள பெலவீனங்களிலிருந்து வளர்ச்சியடைந்த மனிதனுக்குரிய பெலத்திற்கு கிருபையிலும் அறிவிலும் வேகமாக வளர நாட வேண்டும். அவன் தேவனுடைய வார்த்தையை உட்கொள்வதால் விருத்தியடைவான்.

## நாட்களை ஆசரிப்பது வருந்தத்தக்கது

அப்போஸ்தலன் மறுபடியும் விசேஷமாக, நா ட்களை ஆசரிப்பது பலவீனத்திற்கும், சிறுபிள்ளை தனத்திற்கும், வளர்ச்சியில் குறைவுள்ளதாயிருப்பதற்கும் அடையாளம் எனக் குறிப்படுகிறார். (கலா. 4 : 10, 11). "**நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே. நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப் போயிற்றோ என்று உங்களைக் குறித்து பயந்திருக்கிறேன் எனக் கூறுகிறார்.**" இங்கே அவர் ஒரு கட்டத்தில் தேவனுடைய புத்திரர்களுக்கான சுயாதீனத்தை அறிந்தவர்கள் இப்பொழுதோ தப்பறையான போதனை களில் சிக்குண்டு இருக்கிறார்கள் என்று அவர் குறிப்பிடு கிறார். நியாயப்பிரமாண உடன்படிக்கையினால் ஏற்பட்ட பலவீனங்கள் எனவும், அவர்கள் கிறிஸ்துவின் புத்திரருடைய சுயாதீனத்தில் வளராமல், ஊழியக்கார நிலைமைக்கு பின்னாக போகிறார்கள் என அவர்களுடைய இந்த பலவீனங்களை அறிந்து கொண்டார். (வச. 6-9, 19-31 பார்க்கவும்). இந்த பலவீனத்தினால், புத்திரத்துவ சுயாதீ னத்தை இவர்கள் தக்கவைத்துக் கொள்வதில் தவறிப் போவார்கள் என்றும், இவ்வாறாக நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க முற்படுவதால் உண்மையான சுவிசேஷத்தை விட்டு, அதாவது நமது பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார் என்ற சுவிசேஷத்தை விட்டு, தாங்கள் இவ்வாறாக நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தால் கிறிஸ்து தங்களை இரட்சிப்பார் என்ற ஓர் நம்பிக்கையில்லாத ஓர் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளும்படியான நிலைக்கு அவர்களை வழிநடத்திவிடும் என பவுல் அப்போஸ்தலர் பயப்படவும் செய்தார். (கலா. 1 : 4-8; 5 : 2).

நியாயப்பிரமாணத்தைக் குறித்து, குறிப்பாக பண்டிகைகளையும், மாத பிறப்புகளையும், ஓய்வு நாட்களையும் விசேஷிப்பதையும், கிறிஸ்துவுக்குள்ளாக பெற்ற அனைத்து சுயாதீனத்தையும் ஒப்பிட்டு அப்போஸ்தலர் அதே உண்மையைக் கொலோ. 2 : 13-17-ஆகிய வசனங் களில் குறிப்படுகிறார். முன்பு புறஜாதிகளாயிருந்து பின்னர் விசுவாசிகளானவர்கள் (வச. 13) அனைத்து கண்டனத் திலிருந்தும் விடுதலையாக்கப்பட்டு முழுவதுமாக மன்னிக்கப் பட்டிருக்கிறார்கள் என்றும், (வச. 14-ல்) கிறிஸ்துவானவர் நமக்கு விரோதமாக இருந்த எழுதப்பட்ட நியாயப்பிர மாணத்தை நம்முடைய பாதையிலிருந்து நீக்கி, சிலுவையில் ஆணியடித்தார். (எல்லா குறைபாடுகளையும்) நியாயப்பிர மாணத்திலிருந்தும் அதின் அதிகாரத்திலிருந்தும் நீக்கிப் போட்டு, அவர் (தம்முடைய ஜீவியத்தில் அதற்கு கீழ்ப்படிந்து சிலுவையில் மரிக்கும் வரைக்கும் மரணபரியந்தம்

கீழ்ப்படிந்து) அவற்றை ஜெயங்கொண்டு, ஓர் பொதுவான மாதிரியை காண்பித்திருக்கிறார் என குறிப்பிடுகிறார். ஆகையால் போஜனத்தையும் பானத்தையும் (உணவு விஷயங்களையும்) குறித்தோ, பரிசுத்த நாட்களைக் குறித்தோ (வருடாந்திரப் பண்டிகைகளைக் குறித்தோ), மாதப் பிறப்புகளைக் குறித்தோ ஓய்வு நாட்களைக் குறித்தோ (வாரப் பண்டிகைகளை), ஒருவனும் உங்களைக் குற்றப்படுத் தாதிருப்பானாக. (இந்த காரியங்கள் யாவும் கட்டாயமான வைகள் என்று உங்களுக்குப் போதிக்காதிருப்பானாக), ஏனெனில் நம்மு டைய ஆண்டவர் புறஜாதிகளாகிய உங்களையும், யூதராகிய எங்களையும் இருவரையும் விடுதலையாக்கியிருக்கிறாரே. அன்றாட வேலையிலிருந்து ஓய்வு அவசியப்பட்டதால் அது அவர்களுக்கு ஆசரிப்பாக இருந்தது. அதனால் இங்கே சொல்லப்பட்டிருக்கிற ஓய்வு நாட்களும் வருடாந்திர ஓய்வு நாட்களைத் தான் குறிக்கிறதென ஏழாம் நாளைக் கடைபிடிப்பவர்கள் தர்க்கம் பண்ணலாம். ஆனால் அப்போஸ் தலன் இந்த அர்த்தத்தில் இங்கு குறிப்பிடவில்லை. ஏனெனில், "பரிசுத்த நாள்" என்று வருடாந்திர ஓய்வு நாளை ஏற்கெனவே சேர்த்துவிட்டார். அப்போஸ்தலர் பவுல், தன்னுடைய இயல்பான பாஷை நடையில் முதலாவதாக வருடாந்திர பரிசுத்த நாட்களையும், அதின் பின் மாத பண்டிகைகளையும், மாத பிறப்புகளையும், அதின் பின் வார ஓய்வு நாட்களையும் குறிப்பிடுகிறார். பின்பு, பரி. பவுல் இந்த காரியங்கள் யாவும் அவைகளின் பொருள் அதாவது நிறைவேறுதல் (கிறிஸ்துவாகிய தலையும் சரீரமாகிய சபையும்) அபிஷேகம் பண்ணப்பட்டவர்களை குறிக்கு மென்றும், அதாவது அவை வருங்காரியங்களுக்கு நிழலானவைகள் (அடையாளமானவைகள்) என்றும் குறிப்பிடுகிறார்.

தேவனுடைய குமாரர்களுடைய சுயாதீனம் மகிமையானது! அதிலே உறுதியாய் நிலைத்திருக்கக்கட வோம்! நாம் நம்முடைய விசுவாசத்தின் இளைப்பாறுதலில் முழுமையாகக் களிகூரக்கடவோம்; எனினும், உலகத்திற்கு ஓர் ஓய்வுநாள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாம் இளைப்பாறுவோம்; ஏதேனும் ஒரு நாளை விசேஷமாக கடைபிடிக்க வேண்டும் என்றோ அல்லது விசேஷமாகக் கடைபிடிக்க வேண்டாம் என்றோ மனித பிரமாணம் கூறினாலும் நம்முடைய இளைபாறுதல் நிலைத்திருக்கும். அது சரீரப்பிரகாரமான ஓய்வைக் குறிக்காமல் வாரத்தின் ஏழு நாட்களிலும், ஒவ்வொரு நாளின் இருபத்தினான்கு மணி நேரங்களிலும் தொடரக் கூடிய ஓர் காரியமாகும். கடுமையான உடல் உழைப்பும் அந்த இளைப்பாறுதலை முறித்துப்போட முடியாது. அது ஆழமான நித்திய இளைப் பாறுதலாகும். மாம்சத்திற்கடுத்தப்படியாக ஜீவித்து, மனசாட்சியையும் தேவனுடைய உறவையும் துண்டித் தாலோ, அல்லது நிலைத்திருக்க வேண்டிய அடிப்படையாகிய மீட்கும் பொருளை உதறிதள்ளினாலோ மாத்திரமே அந்த இளைப்பாறுதலை முறித்துப் போட முடியும்.

நியாயப்பிரமாணத்தின் கீழிருக்கும் குழந்தைகளா கவோ பணிவிடைக்காரர்களாகவோ அல்லாமல் கிருபையின் கீழ் அவருடைய முதிர்ச்சியடைந்த குமாரர் களாக கிறிஸ்துவிற்குள் இருக்கும் அனைவருடைய நிலையும் எவ்வளவு ஆசீர்வாதமானது! (யோவா. 15 : 15; ரோம. 8 : 15; கலா. 4 : 1-6). ஒருவரும் எடுத்துபோட முடியாததும், உலகத்தாலும் நியாயப்பிரமாணத்தினாலும் கொடுக்க முடியாத இளைப்பறுதலைக் கிறிஸ்துவின் முடிக்கப்பட்ட வேலையிலுள்ள விசுவாசத்தின் உண்மையான இளைப்பாறுதலானது நமக்கு எவ்வளவு ஆசீர்வாத மானதாக இருக்கிறது! இஸ்ரயேலின் ஓய்வு நாளானது (அவர்களுடைய வார ஓய்வு நாட்களோ, அவர்களுடைய வருடாந்திர ஓய்வு நாட்களோ, அல்லது அவர்களுடைய யூபிலிகளோ) மெய்யான நிறைவேறுதலான ஓய்வுநாளைப் பார்க்கிலும் குறைவுள்ளது. அதுபோலவே, அவர்களுடைய பஸ்காவானது நம்முடைய பஸ்காவைப் பார்க்கிலும் குறைவுள்ளது. அவர்களுடைய பலிகளும் அவர்களுடைய பாவ நிவாரண நாளும் நம்முடைய பலிகளுக்கும் பாவ நிவாரண நாளைப் பார்க்கிலும் குறைவுள்ளது. இவைகளில் மெய்யான நிறைவேறுதலானது அதின் நிழல்களைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு மகத்தானவை. இந்த பாடங்களைப் பற்றிய வேத பாடங்களை மேலும் படிக்க "புது சிருஷ்டி" (S. Vol 6) என்ற புத்தகத்தைப் படிக்கும்படியாக அறிவுறுத்துகிறோம்.

* * *

**நாசரேத் LHMM கன்வென்ஷன் 2012 (அக்டோபர் 12, 13, 14)**

**இந்த கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொண்ட, இந்த ஊழியத்தில் பங்குபெற்ற மற்றும் உதவி செய்த சகோதர, சகோதரிகள் யாவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. சங். 133: 34 : 10.**

Visit us at : **www.biblestandardindia.com**


*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*

Bro. V. Vincent Jeyakumar

**Laymen's Home Missionary Movement**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629



FOR PRIVATE CIRCULATION ONLY